பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 26 வியாழக்கிழமை (10.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :104

# பொதுக்கட்டமைப்புக்காக நோர்வே முன்வைத்த திட்டத்தைப் புலிகள் ஏற்பு!

## அரசின் முடிவுக்குக் காத்திருப்பதாக பாலாவிடம் சொல்ஹெய்ம் தகவல்

லண்டன்,மார்ச் 10

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளைக் கையாள்வதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஸ்தாபிப்பது தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்கள் சமர்ப்பித்த யோசனைத் திட்டத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.**

**இத்திட்டத்துக்கு இலங்கை அரசுத் தரப்பின் இறுதி இணக்கத்துக்காக நோர்வே காத்திருக்கின்றது.**

நேற்று லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிற்கும் இடையில் நடந்த இரண்டு மணி நேர சந்திப்பின்போது இவ்விடயங்கள் தெரிவிக்கப்பட்டன என அறியவருகிறது.

விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், நோர்வே வெளிவிவகார அமைச்சின் நிறைவேற்று அதிகாரியான சொல்பிறீட் அம்மையார் ஆகியோர் மதியுரைஞர் பாலசிங்கத்தையும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கத்தையும் அவர்களது லண்டன் இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

அனர்த்த மீள்கட்டுமானத்துக்கானப் பொதுக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்றிரவும் ஒருவர் சுடப்பட்டார்

கொழும்பு,மார்ச் 10

மட்டக்களப்பு புறநகர்ப் பிரதேசமான இருதயபுரத்தில் நேற்றுப் புதன்கிழமை இரவு மதுபான விற்பனை நிலையமொன்றின் உரிமையாளரான ஞானசோதி கிறிஸ்டி (வயது-36) என்பவர் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டார்.

இவரது வீட்டிற்கு வந்த துப்பாக்கிதாரியொருவர் பெயர் கூறி இவரை அழைத்து இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். நெஞ்சில் துப்பாக்கிச் சூட்டுக் காயமடைந்துள்ள இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். (து-க)

## புலிகளின் அரசியல் குழு ஐரோப்பா புறப்பாடு

கிளிநொச்சி,மார்ச் 10

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் இன்று அதிகாலை கட்டுநாயக்காவில் இருந்து புறப்பட்டுச்சென்றனர்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், மகளிர் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி சமாதானச் செயகைப் பணிப்பாளர் புலித்தேவன் மொழி பெயர்ப்பாளர்

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியை ஜனாதிபதி வெளியேற்றினால் அரசுக்கு தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவு தரும்

## நாடாளுமன்றில் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

தனது விருப்புக்கு மாறாகச் செயற்படும் ஜே.வி.பியினரைத் தூக்கி எறிந்துவிட்டு ஜனாதிபதி துணிச்சலுடன் செயற்படுவாரானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அரசை ஆதரிக்கும் என்கிறார் யாழ். மாவட்ட எம்.பி. சிவாஜிலிங்கம்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடர் முகாமைத்துவச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே சிவாஜிலிங்கம் இப்படித் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

ஜனாதிபதி சமஷ்டி முறையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தான் விரும்புகிறார் எனப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். யுத்தம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால், ஜே.வி.பியினரோ இதை எதிர்க்கின்றனர். எனவே, அவர்களை அரசிலிருந்து ஜனாதிபதி தூக்கியெறிய வேண்டும்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்தில் தமிழர்களுக்குத்தான் பாரபட்சம் காட்டப்படுகின்றது என்று பார்த்தால், தெற்கிலே உள்ள சிங்களவர்களுக்கும் கிழக்கிலே உள்ள முஸ்லிம்களுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டுள்ளது. தெற்கிலே மயானத்தில் மக்களை குடியேற்றியுள்ளனர்.

திருகோணமலையில் நகரசபை மைதானத்தில் மக்களைக் குடியேற்றும் நடவடிக்கையில் ஜே.வி.பியினர் ஈடுபட்டனர். அது தடுத்து நிறுத்தப்பட்டது; பாரிய கலவரம் ஏற்படுவது தடுக்கப்பட்டது.

மறுபுறம் வெளிநாட்டு நிவாரண உதவிகள் சூறையாடப்படுகின்றன. திருகோணமலையில் விறகுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஜெனரேட்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மீள்கட்டமைப்பு வேலைத் திட்டங்களில் விடுதலைப் புலிகள் பிரதான அமைப்பாக இணைத்துக் கொள்ளவேண்டும். இந்த இறுதிச்சந்தர்ப்பதை

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் மட்டும் பேசி உருவாக்கப்படும்

# பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டுக்கு முஸ்லிம் காங்கிரஸ் முழு எதிர்ப்பு!

## ஹக்கீம் நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 10

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண, மீள்கட்டுமான நடவடிக்கைகளைக் கையாள்வதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை இலங்கை அரசு தனிப்பட்டமுறையில் விடுதலைப் புலிகளுடன் மாத்திரம் பேச்சுநடத்தி - இணைந்து - உருவாக்குமானால் அதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆணித்தரமாக எதிர்க்கும்.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

இந்த விடயத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களை ஓரம்கட்டிவிட்டு மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும் - தீர்மானத்தையும் நடைமுறைப்படுத்த - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனுமதிக்காது என்றும் அவர் சூளுரைத்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# உலக வங்கியின் பணிப்பாளர் 'வெள்ளைப் புலி' என நோட்டீஸ்

கொழும்பு,மார்ச் 10

உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் ஹெரோல்டுக்கு எதிராக இன்று வியாழக்கிழமை உலக வங்கி அலுவலகத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், நேற்றைய தினம் உலக வங்கிப் பணிப்பாளருக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் சுவரொட்டிகளை நாட்டின் பல பகுதிகளிலும் ஒட்டியிருந்தது.

"தேசாபிமான மக்களே! புலிப் பயங்கரவாதிகளுக்குத் தனியரசு அங்கீகாரத்தை அளிக்கும் உலக வங்கி இலங்கைப் பிரதிநிதியின் அறிக்கைக்கு எதிராக அணிதிரள்வோம்!" உலக

(16ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் மீள்கட்டுமானத் திட்டங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 10 கோடி யூரோ உதவி

கொழும்பு,மார்ச் 10

இலங்கையின் ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத் திட்டங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 10 கோடி யூரோக்களை வழங்குமென்று ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான ஆணையாளர் பெனிட்டா பெரேரோவோல்ட்னர் உறுதியளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை அவரதுஅமைச்சில் சந்தித்து உரையாடிய போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார். வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனர

(16ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டில் வயோதிபர் பலியான சம்பவம்:

# கைதான படையினரின் துப்பாக்கிகள் யாழ்.நீதிமன்றில் நேற்று ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்10

கடந்த 5ஆம் திகதி யாழ்.நகரில் இராணுவத்தினரின் டிரக்டர் மோதி, பாடசாலை மாணவி பலியான சம்பவத்தையடுத்து, இடம்பெற்ற கலவரங்களின் போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு, வயோதிபர் ஒருவரை கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட படையினரின் துப்பாக்கிகள் நேற்று யாழ்.நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன.

யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் யாழ். பொலீஸார் இந்த 7 துப்பாக்கிகளைறிம் நீதிமன்றில் கையளித்தனர்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் கடந்த 5 ஆம் திகதி இராணுவ டிரக்டர் மோதி பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்தமையும் -

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலவரங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள்

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையிலுள்ள வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகள், கீழமைப்பு நிலையில் உள்ள பட்டதாரிகள் மூலம் நிரப்புவதற்கான -

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் விண்ணப்பங்கள் கோரும் விவரங்களும், மாதிரி விண்ணப்பப் படிவமும் -

வாசகர்களின் வசதிக்காக I,II,III,IV ஆம் பக்கங்களில் உள்ளே...

## திருமலையில் இன்றும் நாளையும் மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சி

கொழும்பு,மார்ச்10

போருக்கெதிரான தேசிய முன்னணி நடத்தும் மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இன்று காலை 10.30 மணிக்கு நிலாவெளி தமிழ் வித்தியாலயத்தில் நிவாரணப் பொருள்களைப் பரிமாறல் மற்றும் கலாசாரப் பரிமாற்றம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்று பிற்பகல் ஒருமணியளவில் திருகோணமலை இந்துக் கல்லூரியில் மாணவர் சந்திப்பும் பொருள்கள் பரிமாறலும் இடம்பெறும்.

நாளைக் காலை 8 மணியளவில் கிண்ணியா அல் ஹுதான் மகாவித்தியாலயத்தில் பாடசாலை உபகரணங்கள் பரிமாறலும் பள்ளி மாணவர்களின் கலாசார நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.

## சு.க.மத்திய குழு இன்று கூடுகிறது

கொழும்பு,மார்ச்10

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்குக் கூட்டம் இன்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் ஜனாபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல், சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ஆகிய இரண்டு முக்கிய விடயங்களும் இந்தக் கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்படவுள்ளன என சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி இரு விடயங்களும் சார்பான கருத்து நிலைப்பாடே சுதந்திரக்கட்சிக்குள் பெரும்பான்மையாக இருப்பதால் நாளை 11 ஆம் திகதி நடைபெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகா சம்மேளனத்தின் போது இந்த விடயங்களைத் தீர்மானங்களாக நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பிரமுகரொருவர் தெரிவித்தார். (த)

# ஐ.தே.கட்சிக்கு சமாதானத்தில் பற்றுறுதி இருந்தால் அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க வேண்டும்

## திருமலை மக்கள் பேரவை வேண்டுகோள்

திருகோணமலை,மார்ச்10

சமாதானத்தின் மீதும் தமிழ் பேசும் மக்கள் மீதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்மையான பற்றுள்ளதாயின் அது நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அவசரகாலச் சட்டமானது தமிழ் பேசும் மகளை அடக்கி ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்டு அதன்கீழ் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்படுத்தி ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களை அடக்கிஒடுக்கி கொன்றுகுவித்த வரலாற்றை யாவரும் அறிவார்கள். இதனை ஆரம்பித்து நடைமுறைப்படுத்திய பெருமை ஐக்கியதேசியக் கட்சிக்கே உரியது. ஸ்ரீலங்கா தேசத்தின் முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவசரகாலச் சட்ட விதிகளை தமிழ் மகளுக்கெதிராக எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை சர்வதேசமும் அறியும். ஐக்கியதேசியக் கட்சியால் தொடக்கி வைக்கப்பட்ட இச்சட்ட மூலத்தைப் பயன்படுத்தியே தற்போதைய அரசும் அதே வழியில் தமிழ் மக்களுக்கெதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அவசர காலச்சட்ட விதிகளின் கீழ் உள்வாங்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட தமிழ் மக்கள் இன்றும் விடுதலை செயயப்படாத நிலையில் பல ஆண்டுகளாக சிறையிலிருக்கின்றனர்.

அவர்களை விடுதலை செய்யுமாறு சகல தரப்பினராலும் விடுக்கப்பட்ட வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு அப்பாவியான எம்மக்கள் சொல்லொணாத்துயரத்தை சிறையிலே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில், சுனாமி இயற்கை அழிவு ஏற்பட்டதன்பின் தமிழ் பேசும் மக்களினது பிரதேசங்களையும் தமிழ் பேசும் மக்களையும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக புதிதாக பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகள் அங்கீகாரம் பெறுவதற்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற பொழுது அதனை எதிர்த்து வாக்களிக்காது வாக்களிப்பிலிருந்து ஐக்கி தேசியக் கட்சி வெளியேறிச் செல்வதென்பது தமிழ் பேசும் மக்களை ஏமாற்றி இரட்டை வேடம் போடுகின்ற கபட நாடகமென்றே தமிழ் மக்களாகிய நாங்கள் கருதுகிறோம்.

சமாதானத்தை உருவாக்குவதற்கு முன்னின்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது கட்சியும் தமிழ் மக்களினதும் பிரச்சினையில் அதிகளவு அக்கறையுடையவர்களாகவும் சமாதானத்தின்பால் பற்றுறுதி உடையவர்களாகவும் தங்களை வெளிப்படுததி அவசரகாலச் சட்ட விதிகளுக்கெதிராக பேசியும் அறிக்கையை விடுத்தும் வருகிறார்கள். அவ்வாறாயின் ஏன் அவசரகாலச் சட்ட விதிகளுக்கெதிராக வாக்களிக்காது ஒதுங்கிக்கொள்ள வேண்டும்? பேரினவாத சிங்கள பௌத்தத்திற்கும் ஆதரவு, தமிழ் பேசும் மக்களுக்கும் ஆதரவு என்ற பூச்சாண்டி காட்டும் செயலை ஐக்கிய தேசியக் கட்சி செய்யாது. அவசரகாலச் சட்ட விதிகளை எதிர்த்து வாக்களித்தால் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சியின் மீது மக்கள் ஓரளவாவது நம்பிக்கை வைக்கமுடியும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நச்சுப்பாம்புகளே. ஒன்று புடையனென்றால் மற்றையது கருநாகம் இந்த நிலைப்பாட்டிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுப்பதனை ஐக்கிய தேசியக் கட்சி உண்மையாகவே விரும்புமெனின் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அவசரகாலச்சட்ட விதிகளுக்கெதிராக நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்து எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென தமிழ் பேசும் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். உங்களால் உருவாக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் தான் தமிழ் மக்களை இன்றும் அழிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றதென்பதை உணர்ந்து கொள்வர்களாயின், அதுவே தமிழ் பேசும் மக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய நன்மையாக இருக்கும் - என்றுள்ளது. (8)

# தமிழீழ வைப்பகக் கிளை பூநகரியில் திறந்து வைப்பு

பரந்தன்,மார்ச்10

தமிழீழ வைப்பகத்தின் ஊரகக் கிளை பூநகரியில் கடந்த முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ வைப்பக ஆளுமை மேலாளர் க.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இநத நிகழ்வில் மங்கள விளக்கினை பூநகரிப் பிரதேச கடற்புலிகளின் பொறுப்பாளரும், பூநகரி பள்ளிக்குடா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ்ஸ"ம் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றிவைத்தார்.

வைப்பகத்தின் பெயர்ப் பலகையினை தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் ம.வீரததேவன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

வைப்பகத்தின் கட்டடத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் திறந்துவைத்துக் கட்டட செயற்பாடுகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்களின் சிறப்புரைகளும் இடம்பெற்றுள்ளன. (த-13-352)

# துணைவேந்தர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மருத்துவ பீட இறுதிவருட மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதி ஆண்டு மாணவர்கள் நேற்று துணைவேந்தரின அலுவலகத்தை முற்றுகையிட்டு அவரை வெளியே செல்லவிடாது சில மணி நேரம் மறியலில் ஈடுபட்டனர்.

கடந்த மூன்று மாதகாலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சத்திர சிகிச்சைக்கான கற்கை நெறிகளை மீள ஆரம்பிக்கக் கோரியும்- இது விடயத்தில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் காட்டிவரும் அசமந்தப் போக்கினைக் கண்டித்தும் மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்கள் கடந்த 7 ஆம் திகதி முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுக்காலை யாழ்.பல்கலைக்கழக நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய மாணவர்கள் பல்கலைக்கழக முன் வீதியின் கரையோரமாக நின்று தமது எதிர்ப்பைக் காட்டினர்.

தமது கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கக் கோரி பல்வேறு சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

ஒரு பகுதியினர் வெளியில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட மற்றொரு பகுதியினர் துணைவேந்தர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

தமக்குரிய தீர்வைப் பெற்றுத் தருமபடி துணைவேந்தரிடம் கோரினர்.

விரைவாக இதற்கான நல்லதொரு முடிவை பல்கலைக்கழக நிர்வாகம் தராவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் மருத்துவ பீடத்தின் ஏனைய மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபடுவர் என்றும் மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# பேராசிரியர் மௌனகுருவுக்கு 2004 இற்கான சம்பந்தர் விருது

யாழ்ப்பாணம்,மார்ச்10

2004 ஆம் ஆண்டுக்கான 'சம்பநதர்விருது' கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.மௌனகுருவுக்கு வழங்கப்படுகிறது. மௌனகுருவின் 'அரங்கியல்' என்னும் படைப்புக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுவதாக 'சம்பந்தர் விருது' குழுவின் இணைப்பாளர் க.குணராசா (செங்கை ஆழியான்) அறிவித்திருக்கின்றார்.

முன்னோடிச் சிறுகதைப் படைப்பாளி சம்பந்தர் பெயரால் வருடாந்தம் தெரிவு செய்யப்படும் படைப்பாளிகளுக்கு இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2004 ஆம் ஆண்டிற்கான சம்பந்தர் விருதுக்கு இம்முறை தெரிவுசெய்யப்பட்ட படைப்பாளி பேராசிரியர் சி.மௌனகுரு ஆவார். அவரது 'அரங்கியல்' என்ற ஆய்வு நூல் விருதுக்கும் பரிசுக்குமுரியதாகத் தெரிவாகியுள்ளது. இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக ஈழத்தின் முன்னோடிச் சிறுகதைப் படைப்பாளி சம்பந்தர் பெயரால் வருடாவருடம் இவ்விருது வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில்.பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன், எழுத்தாளர் தெளிவத்தை யோசெப், பேராசிரியர் எஸ்.பத்மநாதன், மூத்த எழுத்தாளர் சு.வே. ஆகியோர் இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். இவ்வாண்டு இவ்விருதினை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு பெறுகிறார். மட்டக்களப்புத் தமிழுக்குத் தந்த பல்துறை அறிஞர் மௌனகுரு ஆவார். ஆரம்ப வயதிலிருநதே கலை நிகழ்ச்சிகளிலும் நாடகத்துறையிலும் மிகுந்த நாட்டம்கொண்டு விளங்கிய அவரைப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் புடம் போட்டு அரங்கியலுக்கு வழிகாட்டிகளில் ஒருவராகத் தந்தார், பேராதனைப் பல்கலைக்கழகக் காலத்தில் கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலி வதை ஆகியவற்றில் நடித்துத் தனனைச் சிறந்த நடிகனாக அடையாளம் காட்டிக்கொண்டார். சடங்கிலிருந்து நாடகம் வரை, தப்பி வந்த தாடி ஆடு, மௌனகுருவின் மூனறு நாடகங்கள், பழையதும் புதியதும், சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும், சங்காரம், ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு, நடிப்பு முறைகள் பற்றிய எண்ணக்கருக்கள், கலை இலக்கியக் கட்டுரைகள், மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் முதலான பல நூல்களின் ஆசிரியர். நவன அரங்கியலில் மிக்கபரிச்சயமுடையவர். ஈழத்தில் மைல் கல்லாகக் கூடிய பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். பதினாறிற்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவரது இலக்கியப் பணிகளைப் பாராட்டி இவ்வாண்டிற்கான சம்பந்தர் விருது அவரின் அரங்கியல் என்ற நூலிற்கு வழங்கப்படுகின்றது. எழுததாளர் சம்பந்தனின் மகள் திரிவேணி கஜன் அவ் விருதுக்கான பணப்பரிசில் ரூபா பத்தாயிரம் வழங்கி வருகிறார். இம்மாதம் 20 ஆந் திகதி நடைபெறவிருக்கும் விழாவில் இப்பரிசிலும் சான்றிதழும் வழங்கப் படவிருக்கின்றன. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)






# பல்கலை ஊழியர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நிர்வாகத்துக்கு எதிராக நேற்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால், பல்கலைக்கழக நிர்வாகத்தின் செயற்பாடுகள் யாவும் நேற்று முடக்கப்பட்டிருந்தன.

பல்கலைக்கழக உயர் அதிகாரி ஒருவர் தொடர்பான குற்றச்சாட்டு விவகாரத்தில் நிர்வாகம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்தே பல்கலைக்கழக ஊழியர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது போராட்டம் தொடர்பாக இவர்கள் நான்கு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் பல்கலைக்கழக நிர்வாகத்தில் கிடைக்காவிட்டால் எதிர்வரும் 14 ஆம் திகதியிலிருந்து பல்கலைக்கழக நிர்வாகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முடக்கும் வகையில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

# கனக.செந்திநாதன் கதாவிருதுக்கு இம்முறை ஆறு சிறுகதைகள் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச்10

இரசிகமணி கனக செந்திநாதன் நினைவாக வழங்கப்பட்டுவரும் 'கனக செந்திநாதன் கதா விருதுக்கு' இம்முறை (2004-2005) ஆறு சிறுகதைகள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

அவற்றின் விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

கடந்த ஆண்டு இலங்கை இலக்கியப் பேரவையின் பெருவிழாவின்போது தெரிவுசெய்யபடட நான்கு சிறுகதைகளுக்குக் கனக செந்தி கதாவிருது வழங்கப்பட்டது. ஈழத்தின் மூத்த சிறுகதையாளரும் விமர்சகருமான இரசிகமணியின் பெயரால் தெரிவுசெய்யப்பட்டுவரும் இச்சிறுகதைகள் ஈழத்தின் சிறுகதை இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பனவாக அமைகின்றன. இவ்விருதுக்கான நிதி நன்கொடையை ஈழத்தின் இன்னொரு மூத்த எழுத்தாளரான ந.அனந்ததேவன் (கனடா) வழங்கிவருகின்றார். இந்தத்தடவை ஆறு சிறுகதைகள் கதா விருதுக்காகத் தெரிவாகியுள்ளன.

கனக செந்திவிருது பெறும் சிறுகதைகள் வருமாறு-

- ★ முள்ளை முள்ளால் - ஜ"னைதா ஷெரீப்
  தினகரன் வாரமலர் 03.10.2004
- ★ மாயாவதியின் கனவு - செம்பியன்செல்வன்
  நமது ஈழநாடு 01.10.2004
- ★ மீள்தல் - சாந்தன்
  நமது ஈழநாடு 01.10.2004
- ★ ஜென்மம் - நீர்வைப் பொன்னையன்
  தினக்குரல் 20.12.2004
- ★ நாடும் நம் மக்களும் - குந்தவை
  மல்லிகை - 40 ஆவது ஆண்டுமலர்.
  ஜனவரி 2005
- ★ பொழுது - க.சட்டநாதன்
  மல்லிகை 40 ஆவது ஆண்டுமலர்
  ஜனவரி 2005.

(ஐ)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## கூட்டுச் சேர்ந்ததால் வந்த குழப்பம் இது

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் சம்மேளன வருடாந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரை பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றது.

வழமையாக ஜனாதிபதி ஆற்றும் 'சணம் பித்தம்; சணம் வாதம்' பேச்சு வரிசையில் இது ஒன்றா? அல்லது தமது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியின் ஆட்சிக்கால எல்லையில் - அந்தத்தில் - நிற்கும் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு பிறந்த 'சுடலை ஞானத்தின்' விளைவாக ஆற்றப்பட்ட உரையா? - என்பதெல்லாம் புரியாமல் அனைவரும் குழம்பிப்போய் நின்றார்கள்.

அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை - முன்னெடுப்பதற்குப் பெரும் தடையாக இருப்பவர்கள் சிங்கள, பௌத்த மேலாண்மைப் போக்குடைய பேரினவாதத் தீவிரவாதிகளே என்பதைப் பெயர் குறிப்பிடாமல் தனது உரையில் ஒப்புக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அந்த அமைப்பின் பேச்சாளர்களான மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் முதல் தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் வரை அனைவருமே - ஏன், இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமை அமைப்புகள் நான்கில் நோர்வே தவிர்ந்த ஏனையவையான அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய சமூகம் உட்பட அனைத்துத் தரப்பினரும் கூட - அமைதி முயற்சிகளுக்குக் குந்தகமாகவும், தடையாகவும், இடைஞ்சலாகவும் இருப்பவர்கள் யார் என்பதைக் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை. அந்தக் குழுவையே இப்போது பெயர் சுட்டாமல் - 'பைத்தியக்காரர்கள்', 'அரசியல்கழுதைகள்', 'எல்லாவற்றையும் எதிர்க்கும் குழப்பவாதிகள்', 'தேசத்துரோகிகள்' என்று பல்வேறு நாமாவளியில் அர்ச்சனைசெய்து - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவர்கள் மீதே குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

அவர் சொல்வதில் உண்மையும், நியாயமும் உள்ளன.

ஆனால், அத்தகையோர் இந்தக் குதிப்புக் குதிப்பதற்கும், அமைதி முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிப்பதற்கும் வகைசெய்யும் விதத்தில் அவர்களுக்கு அதிகாரம் - அந்தஸ்து - செல்வாக்கு - அரசியல் பங்குரிமை - என்றெல்லாம் உயர் இடத்தைப் பெற்றுக்கொடுத்தவர் யார்? அதற்கு வழிசெய்யும் அரசியல் நகர்வுகளுக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய தற்துணிபு அதிகாரங்களைப் பயன்படுத்தி வழிசமைத்தவர் யார்? பற்றையில் இருக்கவேண்டியவை இன்று மெத்தையில் இருந்து குரைப்பதற்கு - குழப்புவதற்கு - அவற்றை மெத்தையில் தூக்கி வைத்தவர் யார்?

சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் வைத்து ஜே.வி.பியினருக்கு எதிராக ஜனாதிபதி வசைபாடியதைப் பார்க்கும்போது 'தெருவில் போன ஓணானைப்பிடித்து மடியில் கட்டிக் கொண்டு குடையுது, குடையுது' என ஓலமிட்டவனின் கதைதான் நினைவுக்கு வருகின்றது.

அமைதிமுறையில் - சமாதான வழியில் - பேச்சு மூலம் - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று வாக்குறுதி அளித்து 2001 டிசெம்பரில் ஆட்சிப்பீடமேறிய ஐ.தே.முன்னணி அரசை அந்தப் பணியைப் பூர்த்திசெய்யவிடாமல் நான்கு ஆண்டுகள் முந்தியே வீட்டுக்கு அனுப்பியவர் இதே ஜனாதிபதிதான்.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காண்பதை அடியோடு எதிர்க்கும் பேரினவாதிகளுடன் அதன்பின்னர் கூட்டமைத்து - சிங்கள மேலாண்மை வாதப் பிரசாரம் மூலம் - ஆட்சியை மீண்டும் பிடித்தவரும் இதே ஜனாதிபதிதான். இப்போது 2001 டிசெம்பரில் நடந்த தேர்தலில் அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண 75 வீதத்துக்கும் அதிகமான மக்கள் வாக்களித்தனர் என்று தமது தற்போதைய வாதத்துக்குப் பலம் சேர்க்க அந்தத் தேர்தல் முடிவை அவர் நாடுவது வியப்புக்குரியது.

அந்தத் தேர்தல் முடிவை நிராகரித்துத்தானே அதன் கீழ் தெரிவான அரசை நேரகாலத்துடன் வீட்டுக்கு அனுப்பி, புதிய தேர்தல் ஒன்றை பௌத்த - சிங்கள இனவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து சந்தித்து ஆட்சி அதிகாரத்தை ஜனாதிபதி கைப்பற்றினார்! வெளியில் இருந்த பேரினவாதிகளை, கூட்டமைத்து அரசில் பங்காளியாக்கிக் கொண்டுவிட்டு இப்போது 'குழப்புகிறார்கள்! குழப்புகிறார்கள்!' என்று கூக்குரலிடுவதில் என்ன பயன்?

இப்போது தாம் முழங்கிய - சூளுரைத்த - கருத்திலாவது - 'எந்த எதிர்ப்பு வந்தாலும் சமஷ்டி அடிப்படையின் கீழ், அதிகாரப் பகிர்வுமூலம் விரைந்து அமைதித் தீர்வு காண்பேன்' என்ற உறுதிமொழியிலாவது - அவர் திடமாக நின்று செயற்படுவாராயின் இலங்கைத்தீவுக்கு நன்மை கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

காலம் இன்னும் பிந்திவிடவில்லை. ஆனால், அது அந்தத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்றது என்பது மட்டும் உண்மை.

# யாழ்.நகரப் பகுதியின் முக்கிய வீதிகள் அகலமாக்கப்பட்டுச் சீர்செய்யப்பட வேண்டும்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவரிடம் சுரேஷ் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம்.மார்ச்10

யாழ்.நகரப் பகுதியின் முக்கிய வீதிகள் அனைத்தும் அகலமாக்கப்பட்டுச் சீர்செய்யப்படவேண்டும்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் வீதிகளைப் பார்வையிட அண்மையில் வருகைதந்த வீதி அபிவிருத்திச் சபைத் தலைவரை நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்.நகரில் பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, மானிப்பாய் வீதி, பண்ணை வீதி ஆகியவற்றில் வாகனப் போக்குவரத்து மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் வீதிகள் அகலமாக்கப்பட்டு இரண்டு வாகனங்கள் சுலபமாகச் செல்லக்கூடிய அகலமுடைய வீதிகளாக மாற்றப்படவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் சுண்ணாம்புக்கற்களுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதால் வீதிகள் யாவும் கருங்கற்களால் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். அவ்வாறு புனரமைக்கப்படும் வீதிகள் குறைந்த பட்சம் 10 வருடங்களுக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய 'கார்பெற்' (Carpet) வீதிகளாக உருவாக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரிடம் வலியுறுத்தினார்.

இவரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட வீதி அபிவிருத்திச் சபைத் தலைவர், இவ்வருடம் யாழ்.- பருத்தித்துறை வீதியும் இன்னொரு வீதியும் புனர்நிர்மாணம் செய்யப்படுவதுடன், ஏனைய சகல விடயங்களையும் கவனத்திலெடுத்து எதிர்வரும் காலங்களில் அவற்றை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்துள்ளார்.

வீதிகள் அகட்டப்படும் பொழுது பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவை எனவும் வீதிகள் அகலமாக்கப்படுவதற்கும் மழை நீர் வழிந்தோடுவதற்கும் ஏதுவாக, தேவையான இடங்களில் பொதுமக்கள் தமது வேலிகளை நகர்த்தி உதவி செய்தால் காலதாமதமில்லாமல் தமது பணிகளைச் செய்யமுடியும் என்றும் வீதி அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவித்தார். (8-202)

# கரையோரத்தில் பலமான அணை நிறுவி அந்த இடங்களிலேயே குடியமரத் தீர்மானம்

### வடமராட்சி வடக்கு மீனவர்கள் கூழக் கலந்தாலோசனை

வடமராட்சி.மார்ச்10

தொண்டைமானாறு தொடக்கம் முனைப் பகுதி வரையிலான பாக்கு நீரிணை கடலோரப் பகுதியில் நூறு மீற்றர் தூரத்திற்கு அப்பால் மீனவர்களுக்கு குடியிருப்புக்கள் அமைப்பது சாத்தியப்படமாட்டாது. சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னர் இருந்ததைப் போலவே அந்தந்த இடங்களிலேயே எமக்குரிய குடியிருப்புக்கள் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு வடமராட்சி வடக்குப் பிரதேச மீனவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நூறு மீற்றர் தூரத்துக்கு அப்பால் மீனவர் குடியேற்றம், குடியிருப்புக்கள் அமைப்பது தொடர்பாக வடமராட்சி வடக்கு மீனவர் சங்கங்களைச் சேர்ந்த மீனவர்கள் ஒன்று கூடித் தீர்மானம் மேற்கொண்டனர்.

வியாபாரி மூலை, எரிஞ்ச அம்மன் கோயில் முன்றிலில் கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமாரன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.


இத்தீர்மானம் தொடர்பாக அக் கூட்டத்தில் மீனவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

ஆழிப்பேரலைக்குப் பின்னர் கரையோரத்திலிருந்து நூறு மீற்றர் தூரத்துக்கு அப்பால்தான் மீனவர்களைக் குடியமர்த்த வேண்டும் என அரசு எடுத்த தீர்மானம் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் பாக்கு நீரிணையை அண்டி வாழ்கின்ற மீனவர்களுக்குப் பொருத்தமற்றது.

நூறு மீற்றருக்கு அப்பால் குடிமனைகளை அமைக்கப் போதிய காணிகள் இப்பிரதேசத்தில் கிடையாது. இப் பிரதேசத்தில் நெருக்கமான குடிப்பரம்பல்கள் இருப்பதனால் குடிமனைகள் அமைக்க அரச காணிகளோ அன்றேல் சுவீகரிக்கக் கூடிய காணிகளோ கிடையாது.

பாக்குநீரிணையில் சுனாமிக்கு முன்னர் கரையோரப் பகுதியில் இருந்து வந்த முருகைக்கல் அணை சிதைவடைந்துள்ளது. அக் கற்களை ஒன்று சேர்த்து, பற்றாக்குறைக்குத் தென்பகுதியிலிருந்து கருங்கல்லை வரவழைத்து கடலில் கரையோரத்தில் அணை போடப்பட வேண்டும். கடலுக்கும், வீதிக்கும் இடையே, அதாவது பருத்தித்துறை - கீரிமலை வீதியின் கரைப் பகுதியுடன் உள்ள வீதியின் கரைப்பகுதியில் உயரமான, அகலமான, உறுதியான அணை நான்கு அடி உயரத்துக்கு மேல் கட்டப்படவேண்டும். இவ்வாறு செய்யப்பட்டால் கரையோரப் பாதுகாப்பு இருக்கும்.

இப்படியான பாதுகாப்பை ஏற்படுத்தி நாம் முன்பிருந்த இடங்களிலேயே குடிமனைகளை அமைத்து மீளத் தொழில் செய்ய அனுமதிக்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)



'நிகொட்' செயற்திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டடத்தை 'நிக்கொட்' திட்டப்பணிப்பாளர் ரி.லங்காநேசன் திறந்து வைப்பதையும் 'நிகொட்'டின் பிரதி திட்டப்பணிப்பாளர் கே.நவரட்ணராஜா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம், பாடசாலைக் கட்டட பொறியியலாளர் செல்வி சாந்தாதேவி ஆகியோர் அருகில் நிற்பதையும் முதல் படத்தில் காணலாம். வகுப்பறைகள், நூலகம், அலுவலகம், கணனிக்கூடம் ஆகியவற்றைக்கொண்ட மாடிக்கட்டடத்தின் தோற்றத்தை அடுத்த படத்தில் காணலாம். (படம்:வடமராட்சிச் செய்தியாளர்)

# பொன்.சுந்தரலிங்கத்துக்கு கௌரவிப்புவிழா இன்று

யாழ்ப்பாணம்.மார்ச்10

இளங்கலைஞர் மன்றத்தின் ஸ்தாபகரும், பிரபல இசை வித்தகரும் சர்வதேச நாடுகளில் இசையைப் பரப்புவதில் ஈடுபாடு உடையவருமான இன்னிசை வேந்தன் பொன்.சுந்தரலிங்கம் கௌரவிக்கப் படவுள்ளார்.

இந்தக் கௌரவிப்பு விழா இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லைஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லைக் குருமணி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பார். அதன் பின்னர் கலைஞர்கள் அவரைக் கௌரவிப்பார்கள்.

அதனைத் தொடர்ந்து பொன்.சுந்தரலிங்கத்தின் சிறப்புக் கச்சேரி இடம்பெறும். இவ் விழாவிற்கு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமை வகிப்பார்.

இளம் கலைஞர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிப்பதற்காக நல்லூர் இளம் கலைஞர் மன்றத்தை நிறுவி, இசைத்துறை வளர்ச்சிக்காக அயராது உழைத்து வந்தவர் பொன். சுந்தரலிங்கம். புலம் பெயர்ந்து சென்று கனடாவில் வசித்து வரும் இவர், வெளிநாடுகளில் இசையைப் பரப்பி வருகின்றார்.

இளங்கலைஞர் மன்றத்தைக் காலத்திற்கு ஏற்ப நவீன மயப்படுத்தி மன்ற மண்டபத்தையும் சகல வசதிகள் கொண்டதாக மிளிரச் செய்வதற்காக அவர் உதவிகளை வழங்கியுள்ளார்.

நாதஸ்வர மேதை அமரர் என்.கே. பத்மநாதனின் நினைவாகப் புலமைப் பரிசில் வழங்க யாழ்.பல்கலைக்கழகத்தில் 4 லட்சம் ரூபாவை நிரந்தர வைப்பில் வைத்துள்ள பொன்.சுந்தரலிங்கம், இசைக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு முன்னேற்பாடாக 7 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (அ-3)

### நாளை

*மாசி 27*
*வெள்ளிக்கிழமை*
*11.03.2005*
*திதி : பிரதமை*
*பிற்பகல் 2.14 வரை*
*நட்சத்திரம் : உத்தரட்டாதி*
*பின்னிரவு 3.42 வரை*
*சுபநேரம் : 6.22 - 7.52*
*ராகுகாலம் : 10.52 - 12.22*
*(யாவும் பழைய நேரப்படி)*

### உதயவாக்கு

வாழ்க்கையில் கோடை மழை போல் வருகிறது துன்பம்; பன்னீரைப் போல் கிடைக்கிறது இன்பம்.
*- காண்டேகர்.*

# 'கிராமத்தின் சிரிப்பு' நூல் வெளியீட்டுவிழா

தென்மராட்சி,மார்ச்10

மட்டுவில் ஆசிரியர் க.அருந்தவராசா எழுதிய 'கிராமத்தின் சிரிப்பு' நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செங்குந்த இந்துக்கல்லூரிச் சமூகமும் இணுவில் தெஸ்பியன் கலைவட்டமும் இணைந்து இவ்விழாவை நடத்துகின்றன.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.பல் கலைக்கழகக் கல்வியியற் பேராசிரிய கலாநிதி சபா.ஜெயராசா, யாழ்.மாவ கல்விக் கழகப் பொறுப்பாளர் க.ஆ லன் ஆகியோர் கலந்துகொள்வார்

நூலின் முதன்மைப் பிரதியை கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைவர் வைத்திய கலாநிதி வை ராஜா, இலங்கை வங்கி யாழ். கி உதவி முகாமையாளர் தி.ஸ்ரீ ராசா, வா. ராதாகிருஷ்ணன், எ துரை ஆகியோர் பெற்றுக்கொள்

இந்த நூலின் அறிமுக விழ வரும் 13ஆம்திகதி ஞாயிற்றுக் பிற்பகல் 3மணிக்கு மட்டுவில் ப யாலயத்தில் நடைபெறும்.

# கதிர்காமருக்கும் தனபாலவுக்கும் இடையிலான நிழல் யுத்தம் நாட்டில் யுத்தத்தை வெடிக்க வைக்கும்!

## ஐ.தே.கவின் பிரதிச் செயலாளர் கூறுகின்றார்

கொழும்பு,மார்ச்10

அரசின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளரான கலாநிதி ஜயந்த தனபாலவுக்கும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமருக்கும் இடையில் நடைபெறும் நிழல் யுத்தம் நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்றை வெடிக்க வைக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

- இப்படி ஐ.தே.க.எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க.பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ள ஜே.வி.பியினருக்கு ஆதரவாக சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் செயல்படுகின்றனர். சிரேஷ்ட அமைச்சர்களான லக்ஷமன் கதிர்காமரும், அநுரா பண்டார நாயக்கவும் ஜே.வி.பியினர் மீது சவாரி செய்து பதவிகளைப் பிடிப்பதில் தீவிரமாக உள்ளனர்.

ஏற்கனவே, கைவிட்டுப் போன பிரதமர் பதவிக்காக லஷ்மன் கதிர்காமரும், ஜனாதிபதி பதவிக்காக அநுரா பண்டாரநாயக்கவும் முயற்சிக்கின்றனர்.

ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலரும் இதற்கு ஆதரவாக இருக்கின்றனர். அரசுக்குள் ஏற்பட்டுள்ள இப்பிளவு, ஜனாதிபதியைத் திக்குமுக்காட வைத்துள்ளது - என்று தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் கொழும்பு மாவட்ட ஐ.தே.க.எம்.பியான பந்துல குணவர்த்தனவும் உடன் இருந்து விளக்கம் அளித்தார். அவர், தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் கட்சி ஆட்சியில் இருக்கும் போது வடக்கு - கிழக்குப் பிரதேசம் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டே இருந்தது.

அப்பிரதேசங்களுக்குப் பொருளாதாரத் தடைமுதல் பல தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. அரசுடன் தொடர்பற்ற பகுதியாகவே அது காணப்பட்டது.

ஆனால், நாம் ஆட்சிக்கு வந்தவுடன் தூர நோக்குடன் செய்து கொண்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை பிளவுபட்டிருந்த நாட்டை ஒன்றாக்கியது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மூன்றாவது வருட நிறைவு தினத்தில் அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால இதனை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

யுத்த நிறுத்த நடவடிக்கையினால் பல ஆயிரம் உயிரிழப்புக்கள் தடுக்கப்பட்டுள்ளன. பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்று ஜயந்த தனபால கூறினார். இதனை ஜனாதிபதியும் உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைத்த போது, இடைக்கால நிர்வாக சபையை வழங்கவும், சமாதானப் பேச்சை ஆரம்பிக்கவும் மக்கள் ஆணை வழங்கிவிட்டனர் என ஜனாதிபதி தம்பட்டம் அடித்தார்.

அரசு புலிகளுடன் மட்டுமே பேச்சு நடத்தும், இறுதி முடிவின் போதே ஏனைய அமைப்புக்களையும் அழைத்துப் பேசுவேன்" என்றும் இதே ஜனாதிபதிதான் கூறினார்.

சமாதானச் செயலகத்தின் ஊடாகத் தீர்வையற்ற முறையில் 4 சொகுசு வாகனங்களைப் புலிகள் பெற ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பாதை அமைப்பதற்கும், குடி தண்ணீர் விநியோகத்தை ஏற்படுத்தவும் உலக வங்கியுடன் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஜயசுந்தர அரசின் சார்பில் ஒப்பந்தம் ஒன்றையும் செய்துள்ளார்.

இதை எல்லாம் ஜே.வி.பியினர் வாயை மூடிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் அதைக் கூறிவிட்டதற்கு மட்டும் ஜே.வி.பியினர் பெரிதாக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

ஜனாதிபதியுடன் நேரடியாக மோத முடியாதவர்கள் உலக வங்கிப் பணிப்பாளருடன் மோதுகின்றனர் - என்றார்.

(க-3)


## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வாடகைக்கு வீடு தேவை

நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் இரண்டு உறுப்பினர் உள்ளடக்கிய ஆசிரியர் குடும்பம் ஒன்றுக்கு வசதியான வீடு பகுதியாகவோ முழுமையாகவோ வாடகைக்குத் தேவைப்படுகின்றது. தொடர்பு: 0776011135 (இரவு 9 மணிக்குப் பின்).(42841)

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம்,திருநெல்வேலி இல.28/23, மணல்தறை லேனைச் சேர்ந்த த.தர்மேந்திரா (திலக்) என்பவருடைய NOKIA 2300 கைத் தொலைபேசி ஒன்று (சாம்பல் நிறம்) 08.03.2005 ஆம் திகதி சுழிபுரத்துக்கும் சித்தன்கேணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு இல. 0776589037 (42894)


## ஹோம பெருவிழா

வடமராட்சி,மார்ச்.10

மிருசுவில் உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் 1008 கலச அபிஷேக ஸ்கந்த ஹோம பெருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமையும், 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது. (ஐ-173)

## நிவாரணம் கேட்டு போராட முஸ்தீபு

வடமராட்சி,மார்ச்10

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகர்கோவிலைச் சேர்ந்த ஐந்து குடும்பங்கள் தமக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக சுனாமி நிவாரணம் வழங்கப்படாவிட்டால், கரவெட்டி பிரதேச செயலகம் முன்பாக எதிர்வரும் 18ஆம் திகதி சாத்வீகப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக யாழ்.அரச அதிபருக்கு அறிவித்துள்ளனர்.

நாகர் கோவிலை நிரந்தர முகவரியாகக் கொண்ட 5 குடும்பங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டுத் துன்னாலையில் இடம்பெயர்ந்து வசிககின்றனர். இவர்கள் நிவாரணம் கோரி விண்ணப்பித்த போதும் தமக்கு நிவாரணம் வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அக்குடும்பங்கள் யாழ்.அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (ஐ-173)

## சமய சந்நிதிகளில்

அல்வாய் வடக்கு, சக்கோட்டை புனித சவேரியார் தேவாலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். (ஐ-173)

✤✤✤

வடமராட்சி,மார்ச்10

பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள கொட்டடி ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் வருடாந்த பெருந்திருவிழாவின் தீர்த்தோற்சவம் இன்று வியாழக்கிழமை நடைபெறும். இந்தப் பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ஐ-173)

✤✤✤

வலி.தென்மேற்கு,மார்ச்10

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

உற்சவ தினங்களில் தினமும் மாலை 6.30 முதல் 7.30 வரை சைவப் புலவர் க.நித்தியதசீதரன் 'அம்பாளின் அருள் கடாட்சம்' என்ற விடயம் பற்றித் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஐ-135)


✤✤✤

குருநகர்,மார்ச்10

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தினின் ஏற்பாட்டில் சிலுவைப் பாதயாத்திரை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பாத யாத்திரை வழமைபோல் சாட்டி சிந்தாத்திரை மாதாஆலயம் வரை இடம் பெறவுள்ளதாகக் குருநகர் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத் தந்தை வண.பிதா.சி.ஜஸ்ரின் அடிகளார் தெரிவித்துள்ளார். (ஐ-202-51)




பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள் இடைபட்ட தமது சத்திரசிகிச்சைக்கான கற்றல் நடவடிக்கைகளை பிக் குமாறு கோரி நேற்றைய தினமும் போராட்டத்தில் ஈடுபட்டிது எடுக்கப் பட்ட படங்கள் இவை. சத்திரசிகிச்சைக்கூட கோல ள அணிந்து சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு மருத்துவ ன்பாக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதை காணலாம். *(படங்கள் பிரபா).*

# பொதுக் கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியின் எதிர்ப்பு அர்த்தமற்றது

## அமைச்சர் ஜயரத்ன கூறுகிறார்

கொழும்பு,மார்ச்10

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசும், விடுதலைப்புலிகளும் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்க இணங்கி வரும்போது ஜே.வி.பி அதனை எதிர்ப்பது அர்த்தமற்றதும், மனிதாபிமானமற்றதுமான செயல் என்று அமைச்சர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளுக்காக அரசும், விடுதலைப் புலிகளும் உருவாக்கியுள்ள உத்தேசப் பொதுக்கட்டமைப்புக்கு ஜே.வி.பி கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறித்துக் கேட்டபோதே அமைச்சர் ஜயரத்ன மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது அரசின் தலையாய கடமை. தெற்கைப் போன்று வடக்கு - கிழக்கிலும் நாம் எமது பணிகளைச் செய்யவேண்டும். இதை ஜே.வி.பி எதிர்ப்பது வேடிக்கையானது. இதை நாம் மனிதாபிமான ரீதியில் நோக்கவேண்டும். யாருக்காவது இதனால் நன்மை ஏற்படப்போகிறது என்றோ அல்லது வேறு எந்தக் காரணங்களுக்காகவோ இவ்வாறான முயற்சிகளை நாம் தாமதப்படுத்தினால் பாதிக்கப்படப் போவது மககள் தான். மனிதத்தன்மையுடன் இந்த விடயத்தில் நோக்க வேண்டும். - இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார். (க-3)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




பருத்தித்துறை, தும்பளையைச்
சேர்ந்த துசியன் – வாஜினி தம்பதியினரின்
செல்வப்புதல்வன் செல்வன் அபிநாஷ்

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (10.03.2005) வியாழக்கிழமை தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் அபிநாஷ் அவர்களை அம்மா,அப்பா, அம்மம்மா, அப்பு, அப்பம்மா, அப்பப்பா, சித்தப்பா, சித்தி, அக்கா, நோர்வேயிலுள்ள அத்தை, மாமா, லண்டனில் வசிக்கும் சித்திமார், சித்தப்பாமார், அண்ணா, அக்கா,மாமா, மாமி, மச்சாள், பருத்தித்துறையைச் சேர்ந்த பெரியம்மா, பெரியப்பா, அண்ணாமார், அக்கா மற்றும் தொட்டப்பா, தொட்டம்மா, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் பல்கலையும் கற்று லூர்து மாதாவின் ஆசியுடன் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ மனமார வாழ்த்துகின்றார்கள்.



லூர்துமாதா கோயிலடி,
தும்பளை,
பருத்தித்துறை.
T.P-021 226 3924

தகவல்: சித்தப்பா
(தொட்டப்பா)

# வடக்கு - கிழக்கு மாகாண
# பொதுச்சேவையிலுள்ள வெற்றிடங்களை
# வேலையற்ற பட்டதாரிகள்/
# கீழுழைப்பு நிலையிலுள்ள பட்டதாரிகள் மூலம் நிரப்புதல்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இதன்கீழ் அட்டவணையில் விவரிக்கப்படுகின்ற பதவிகளுக்கு அப்பதவிகளுக்கு நேரே குறிக்கப்பட்ட பட்டங்களைக் கொண்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வதியும் வேலையற்ற பட்டதாரிகளிடமிருந்தும் கீழுழைப்பு நிலையிலுள்ள பட்டதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தற்சமயம் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் பயிலுநர்களாக இணைக்கப்பட்டிருக்கும் பட்டதாரிகளும் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.**

**02.சேவை நிபந்தனைகள்:**

I இப்பதவி நிரந்தரமானதாகும். நியமனம் பெறுவோர் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின்கீழ் பங்களிப்பு ஓய்வூதியமொன்றிற்கு உரித்துடையோராவர். பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு ஊழியர் தமது மாதாந்த சம்பளத்திலிருந்து 8% வீதத்தைப் பங்களிப்புத் தொகையாகச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் 12% வீதத்தைப் பங்களிப்புத் தொகையாகச் செலுத்தும். ஏற்கனவே, ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின்கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை இருப்பதோடு, விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குத் தொடர்ந்து பங்களிப்புத் தெகையினைச் செலுத்துதல் வேண்டும்.

II தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10ஆம் பந்தி முதல் 12ஆம் பந்தி வரை குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் உரியதாகும்.

III தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரியானவர் வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகத்தின் தீர்மானத்திற்கமைவாக மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்ற வேண்டியிருப்பதுடன், தாம் முதல் நியமனம் பெறுகின்ற நிறுவனத்தில் ஆகக்குறைந்தது 5 வருடங்கள் கடமையாற்றவும் வேண்டும்.

IV தேர்ந்தெடுக்கப்படுகின்ற எல்லா அபேட்சகர்களும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவையின் ஒழுங்கு விதிகளுக்கும் நிதி நியதிகளுக்கும் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிதி நியதிகளுக்கும் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் பணிப்புரைகளுக்கும் அல்லது கட்டளைகளுக்கும் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கும் அமைந்தொழுகுதல் வேண்டும்.

**03.சம்பள அளவுத் திட்டம்:**

இப்பதவிக்குப் பொதுநிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 9/2004 இல் குறிப்பிடப்பட்டுள்ள TB-2-5-2 இற்கமைவாக வருடாந்தம் ரூபா 126,600 - 6X1,560 - 8X2,220 - 5X3,480 - 171,120/- கொண்ட சம்பள அளவுத்திட்டம் உரியதாகும்.

**04.தகைமைகள்:**

**அ) கல்வித்தகைமை:**

அட்டவணையில் தரப்பட்ட பதவிகளுக்கு எதிராகக் குறிக்கப்பட்ட பாடங்களுடன் கூடிய பட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான தகைமையென வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய கல்விச்சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**ஆ) ஏனைய தகைமைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல்வேண்டும்.

02. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல்வேண்டும்.

03. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுதிகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும், 45வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச/மாகாண சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல.

04. பரீட்சார்த்தி விண்ணபிக்கும் அம்மாவட்டத்தில் பிறந்தவராதல் வேண்டும். இல்லாவிடின் விண்ணப்ப முடிவுதிகதிக்கு உடன் முந்திய ஆறு (6) வருட காலத்தில் குறைந்தபட்சம் 3 வருடங்களாவது அவர் அம்மாவட்டத்தில் தொடர்ச்சியாகவும், நிரந்தரமாகவும் வசிப்பவராதல் வேண்டும். இல்லாவிடின் அவர் தொடர்ந்து 5 வருடகாலம் அம்மாவட்டத்தில் இரண்டாம் நிலைப்படிப்பை மேற்கொண்டிருக்க வேண்டும்.

05. வடக்கு - கிழக்கு மாகாணத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்தும், இம்மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களில் வசிப்போர் அதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தை நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

## 05. ஆட்சேர்ப்புமுறை:

அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம், அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக எழுத்துப்பரீட்சை பெறுபேற்றின் திறமை அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அவர்களிடம் இவ்வறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால், இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச்செய்யப்படும். எனினும், இந்நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நிலவுகின்ற வெற்றிடங்களின் தொகைக்கு மேலதிகமாக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவின் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்போட்டிப் பரீட்சை நடத்தப்படும்.
இப்பரீட்சையில் அபேட்சகர் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பதவியும் பணியாற்றுவதற்கான நிலையமும் தீர்மானிக்கப்படும். திருப்திகரமான புள்ளிகளைப் பெறாத அபேட்சகர் விடயத்தில் அவருக்கு வழங்கும் பதவி, சேவையாற்றும் நிலையம் என்பவற்றை வடக்கு - கிழக்கு மாகாணசபை நிர்வாகமே தீர்மானிக்கும்.

## 06.எழுத்துப் பரீட்சை:

இவ்வெழுத்துப் பரீட்சையானது கீழ் குறிப்பிடப்படும் வினாத்தாளைக் கொண்டிருக்கும்.

| விடயம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|
| நுண்ணறிவு வினாத்தாள் | ஒரு மணித்தியாலம் | 200 புள்ளிகள் |

(மறுபக்கம் பார்க்கவும்)

**07. பரீட்சைக்கட்டணம் : இப்பரீட்சைக்கட்டணம் ரூபா.200/-**

விண்ணப்பதாரி வதியும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/-ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்துடன், எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 200/- ஐச் *"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை"* என்ற பெயருக்கு காசுக்கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

**08. விண்ணப்பிக்கும் முறை:**

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக ஏ4 (21 செ.மீ X 29 செ.மீ) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்திசெய்த விண்ணப்பங்கள் 2005.03.31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக *"செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, இல. 35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை"* என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

ஒரு பரீட்சார்த்தி, ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திலும் ரூபா 200/- ஐச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை ஒட்டியனுப்புதல் வேண்டும்.

**09. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட மாவட்டங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :-**

| மாவட்டம் | | எண் | மாவட்டம் | | எண் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | 1 | திருகோணமலை | - | 6 |
| மன்னார் | - | 2 | மட்டக்களப்பு | - | 7 |
| வவுனியா | - | 3 | அம்பாறை | - | 8 |
| கிளிநொச்சி | - | 4 | கல்முனை | - | 9 |
| முல்லைத்தீவு | - | 5 | | | |

ஒரு பரீட்சை மாவட்டம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை மாவட்டத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**வே.பொ.பாலசிங்கம்,**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு - கிழக்கு மாகாணம்,**
**திருகோணமலை.**

# மாதிரி விண்ணப்பப் படிவம்

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையிலுள்ள வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகள்/கீழுழைப்பு நிலையிலுள்ள பட்டதாரிகள் மூலம் நிரப்புதல்

சுட்டெண்: [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்.................................................................. பதவி இல. [ ]

மொழிமூலம்:

| | |
|---|---|
| **தமிழ்** | |
| **சிங்களம்** | |

01. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு/திருமதி/செல்வி)

தமிழில்:..................................................................

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)..................................................................

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:

தமிழில்:..................................................................

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)..................................................................

03. அடையாள அட்டை இல: [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

04.1 நிரந்தர முகவரி:

தமிழில்:..................................................................

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)..................................................................

04.2 தபால் முகவரி:

தமிழில்:..................................................................

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)..................................................................

(தொடர்ச்சி III ஆம் பக்கத்தில்)

கேணல் கிட்டு நினைவு உதைபந்தாட்டம்:

# மாகாண மட்டப் போட்டியில் மன்னார் அணிக்கு வெற்றிக் கிண்ணம்

கிளிநொச்சி,மார்ச்10

கேணல் கிட்டு நினைவாக, மாவட்ட ரீதியில் வெற்றிபெற்ற கழகங்களுக்கு இடையில் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மன்னார் சென். ஜோசப் அணி சம்பியன் ஆனது. இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுத் திடலில் தொடர்ந்து நடைபெற்றன.

இப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யங்ஹென்றீஸ் அணி, கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி, முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முள்ளியவளை வித்தியா அணி, வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வவுனியா மருதநிலா அணி, மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பனங்கட்டிக்காட்டு சென். ஜோசப் அணி, மட்டக்களபபு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசடித்தீவு விக்கினேஸ்வரா அணி, திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிக்பூட் அணி ஆகியன பங்குபற்றின.

முதல் நாள் ஆட்டத்தில் யாழ் அணி முல்லை. அணியை 4:0 என்ற கோல்கணக்கில் வென்றது. கிளிநொச்சி அணி வவுனியா அணியை 2:0 என்ற கோல்கணக்கில் வென்றது. மன்னார் அணி மட்டக்களப்பு அணியை 10:0 எனும் கோல்கணக்கிலும் வென்றது.

2ஆம் நாள் ஆட்டத்தில் கிளிநொச்சி அணி மட்டக்களப்பு அணியை 4:0 என்ற கோல் கணக்கிலும் திருகோணமலை அணி - முல்லைத்தீவு அணியை 5:1 என்ற கோல்கணக்கிலும் மன்னார் அணி - வவுனியா அணியை 4:0 என்ற கோல்கணக்கிலும் வென்றன.

மூன்றாம் நாள் ஆட்டத்தில் வவுனியா அணி - மட்டக்களப்பு அணியை 11:0 என்ற கோல்கணக்கிலும் யாழ். அணி - திருகோணமலை அணியை 1:0 என்ற கோல் கணக்கிலும் கிளிநொச்சி அணியினை மன்னார் அணி 2:0 என்ற கோல்கணக்கிலும் வென்றன.

**அரையிறுதிப் போட்டியில்....**

நான்காம் நாள் அரையிறுதி இறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதியில் கிளிநொச்சி அணி யாழ். அணியினை 1:0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. இரண்டாவது அரையிறுதியில் மன்னார் அணி திருகோணமலை அணியை 2:1 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது.

இறுதிப்போட்டியில் கிளிநொச்சி வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியும் மன்னார் பனங்கட்டிக்காட்டு சென்ஜோசப் அணியும் மோதின. இப்போட்டியில் மன்னார் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வென்று 2005ஆம் ஆண்டிற்கான கேணல்கிட்டு ஞாபகார்த்த கால்பந்துப் போட்டியின் சம்பியனானது. இறுதியாக அணி வீரர்களுக்குப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வடக்கு - கிழக்கு மாகாண உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் எஸ்.தெய்வேநதிரன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் சு.கனகராசா உட்படப் பலர் வழங்கிக் கௌரவித்தனர். போட்டியின் சிறந்த கோல் காப்பாளராக வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியைச் சேர்ந்த கஜரூபனும் சிறந்த வீரராகப் புனித ஜோசப் அணியைச் சேர்ந்த பீற்றர் ஜோன்ஸும் தெரிவுசெய்யப்பட்டனர். (3-405-190)

# தேசிய இளைஞர் மன்ற ஏற்பாட்டில் இருகட்டங்களாக விளையாட்டுப் போட்டி

வலி.வடக்கு,மார்ச்10

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

முதற்கட்டமாக பிரதேச செலாளர் பிரிவுகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் கட்டமாக மாவட்ட மட்டத்திலும் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. இப்போட்டிகளை நடத்துவது சம்பந்தமான சுற்று நிருபங்கள் கொழும்பு தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தில் இருந்து அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

கடந்தாண்டுகளில் இப்போட்டிகள் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெற்றபோதிலும் யாழ்.மாவட்ட ரீதியாகப் போட்டிகள் இடம்பெறவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.(3-86)

*தென்மராட்சிப் பிரதேச துடுப்பாட்டம்:*

# பிக்பூட், கைதடி சரஸ்வதி இறுதியாட்டத்துக்குத் தகுதி

வரணி,மார்ச்10

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்துக்கு பிக்பூட், கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகங்கள் தெரிவாகியுள்ளன.

வரணி மகாவித்தியாலயத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியில் 26 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்துக்குத் தெரிவாகியுள்ள இரு அணிகளும் மட்டுவில வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மோதவிருக்கின்றன.

கடந்த வருடமும் இந்த அணிகளே இறுதியாட்டத்தில் மோதின.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை தென்மராட்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதீஸ்குமார் செய்திருந்தார். (3-170)

# சென்ரல் – யூனியன் ஆட்டம் சமநிலையில் முடிந்தது

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டித் தொடரில் யாழ்மத்திய கல்லூரி அணிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிக்கும் இடையிலான ஒருநாள் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

யாழ்மத்தியகல்லூரி மைதானத்தில் நடத்த இந்தப் போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 165 ஓட்டங்களைப்பெற்றது. இதில் தவகோபன் 36ஓட்டங்களையும் பிரசாத் 24ஓட்டங்களையும் தம் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர் மதிப்பிரியன் 30 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 9விக்கெட் இழப்பிற்கு 307 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றொகன் 79ஓட்டங்களையும் பிரசாத் 56ஓட்டங்களையும் செல்ரன் 56ஓட்டங்களையும் கலீஸ்ரன் 23ஓட்டங்களையும் மகிபன் 22ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யூனியன் கல்லூரி அணி வீரர் குகதீஸ் 48ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுகளையும் யதூஸ் 71 ஓட்டங்களைக் கொடுத்து 5விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (3-190)

யாழ்.கோட்ட வலைப்பந்தாட்டம்

# வேம்படி மகளிர் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் முதலிடம்

யாழ்.கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் 15, 17, 19 வயது அணிகளுக்கு நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் முதலிடம் பெற்றது.

இச்சுற்றுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**15வயதுப் பிரிவு**

வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**17வயதுப் பிரிவு**

வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம். (3-190)

# யாழ்ப்பாணக் கல்லூரியை மகாஜனா 6 விக்கெட்டுக்களால் வென்றது

*ரவிசாந்த் சதம் அடித்தார்*

வலிவடக்கு,மார்ச்10

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற கிரிகெட் போட்டியில் மகாஜனக் கல்லூரி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையேயான போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.




முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 181 ஓட்டங்களுக்குள் அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

யாழ்பாணக் கல்லூரி வீரர்களான பெரியதம்பி 37 ஓட்டங்களையும் சசிதரன் 34ஓட்டங்களையும் பிரியதர்சன் 27ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றனர்.

மகாஜனக் கல்லூரி வீரர்களான ரஜீவ் 6.3 ஓவர்கள் பந்து வீசி 21ஓட்டங்களுக்கு 5விக்கெட்டுக்களையும் எல்மோ நிக்ஷன் 9 ஓவர்களில் ஓர் ஓட்டமற்ற ஓவர்களுடன் 32 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணியினர் 9விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் இரவிசாந்த் 113ஓட்டங்களையும், தர்சன் 32ஓட்டங்களையும் பெற்றனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த ஜனார்த்தனன் 25ஓவர்களில் 8ஓட்டமற்ற ஓவர்களுடன் 44 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் தனாகரன் 21ஓவர்களில் 8ஓட்டமற்ற ஓவர்களுடன் 70 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் யாழ்ப்பாணக் கல்லூரி 155 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் பெரியதம்பி, தனாகரன் ஆகியோர் தலா 23ஓட்டங்களையும் நிரூபரன் 21ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மகாஜனக் கல்லூரியின் சார்பில் பந்து வீசிய தனஞ்செயன் 5.1ஓவர்கள் பந்து வீசி 21ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் ரஜீவ் 11ஓவர்களில் 3ஓட்டமற்ற ஓவர்களுடன் பந்து வீசி 33ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் எல்மோ நிக்ஷன் 9ஓவர்களில் இரண்டு ஓட்டமற்ற ஓவர்களுடன் 18ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

114ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 4விக்கெட்டுக்களை இழந்து தனது வெற்றி இலக்கை அடைந்துகொண்டது.

ஆட்டமிழக்காது ஜெயப்பிரியன் 24 ஓட்டங்களையும், ரவிசாந்த் 23ஓட்டங்களையும் பெற்றதுடன், தனஞ்செயன், மயூரன் ஆகிய இருவரும் தலா 19ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வீரன் சிவப்பிரகாசம் 11ஓவர்களில் ஒரு ஓட்டமற்ற ஓவர்களுடன் 39ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (3-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 7பேர் பங்குபற்றும் விலகல் - முறையிலான உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று வியாழக்கிழமை மாலை யாழ்.பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ மாலை 4மணிக்கு - சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக 'பி' அணி எதிர் பாடும்மீன் 'சி' அணி.

☆ மாலை 4.45 மணிக்கு - சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக 'சி' அணி எதிர் யூனியன் 'பி' அணி.மாலை 5.30 மணிக்கு -பொற்பதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் யூனியன் 'ஏ' அணி.

## கண்டாவளைக் கோட்ட விளையாட்டுப் போட்டிகள

கிளிநொச்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட கண்டாவளைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்றும நாளையும் நடைபெறவுள்ளன. 13 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான போட்டிகள் தருமபுரம் இல01 அதக பாடசாலையிலும் 13 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான போட்டிகள் தருமபுரம் ம.வியிலும் நடைபெறவுள்ளன.(3-202-405)

# சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உள்ளரங்க விளையாட்டுக் கழகம், மக்கள் வங்கி அனுசரணையுடன் டாக்டர் பி.ரி.நைலஸ் ஞாபகார்த்தமாக சதுரங்கப் போட்டிகளை நடத்தியது.

அந்தப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**10 வயதுப் பிரிவு - ஆண்கள்**

எஸ்.கஜானன், எஸ்.சஞ்ஞயன்.

**பெண்கள்**

பி.மாதங்கி, எம்.ஜோய்காருண்யா, எஸ்.பிரியங்கா.

**12வயதுப் பிரிவு - ஆண்கள்**

என்.லவலோஜன், எஸ்.தனஞ்ஜெயன், எஸ்.ஆர்.ஹரிகரன்.

**பெண்கள்**

வி.சிவதர்சிகா, ஜீ.யாதவி.

**14 வயதுப் பிரிவு - ஆண்கள்**

ஆர்.நிரோசன், எஸ்.வித்தககுமரன், எஸ்.விஷ்ணுசந்தா.

**பெண்கள்**

எஸ்.மயூரா, ல.கௌசிகா.

**16 வயதுப் பிரிவு - ஆண்கள்**

எஸ்.சேரன், எஸ்.வல்லபகுமரன்.

**பெண்கள்**

ஆர்.பவதாரணி, பி.சுகன்யா.

**18 வயதுப் பிரிவு - ஆண்கள்**

எம்.துவாரகீசன், எம்.குகதீபன்.

**பெண்கள்**

எஸ்.வித்தியாரணி, கே.ரேவதி.

**திறந்த அடிப்படை - ஆண்கள்**

கே.ஆதவன், எம்.சியாமளன்.

**பெண்கள்**

எஸ்.ராதிகா, எஸ்.சிவப்பிரியா. (3-190)



நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடந்த மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மின்சாரசபையின் வவுனியா அலுவலகப் பொறியியலாளர் க.தவராசா உரையாற்றுவதையும் வடமராட்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரம் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: சி.சுந்தரலிங்கம் கரவெட்டிச் செய்தியாளர்)

## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12 - 04 - 1934



விண்ணில் 10 - 03 - 1995

### செல்வி பரமேஸ்வரி கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியை, இளவாலை)

அன்பின் உறைவிடமாய் பாசத்தின்
பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய்
எங்கள் எல்லோரினதும் நெஞ்சங்களிலும் வாழ்ந்து
எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாகவும் விளங்கிய
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பத்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது

374, கச்சேரி நல்லூர்வீதி,
நல்லூர்.

(42826)(39-16-34-29)

பாசமுடன் நினைவுகூரும்:
தம்பி, தங்கைகள், குடும்பத்தினர்.

## ஓராண்டு நிறைவிலே உன் நினைவுகளில் ஓராயிரம் கண்ணீர்த் துளிகள்

06 - 12 - 1969



19 - 02 - 2004

### அமரர் தயாவரணி மயில்வாகனம் (தயா)

திதி: 10.03.2005 (அமாவாசை திதி)

அன்பு, பண்பு, பாசம் என கொண்டவளே!
ஓர் வயிற்றிலே கன்னியாகுமாரிகளாக
ஊற்றெடுத்து ஒன்றாக பிறந்தவளே!
ஆஸ்மா எனும் கொடிய நோய்
உன்னை கொல்ல நினைத்ததா?
தயா, தயா, தயா...... என கூப்பிட்டோமே!
இப்போது யாரை கூப்பிடுவது?
தயா நீ இருந்து உறவாடிய காலம் எங்கே?
நீ இல்லாது ஒவ்வொரு நிமிடமும்
வேதனைப்படுகிறோமே!
எங்களை விட்டுப் பிரிய உனக்கு
காலன் விடை தந்து கூப்பிட்டானா?
தயா உன் உடல் எங்கே?....
உன் உருவம் நிழலாக தெரிகிறது-ஆனால்
எங்களுடன் நிஜமாக நீ இல்லையே?
தயா கடைசி நேரம் நோய் என்னும்
நிமோனியா காய்ச்சல் உன்
உயிரை பிரிக்க நினைத்ததா!
எங்கள் எல்லோரையும் தத்தளிக்க விட்டு
நீ அம்மாவிடம் செல்ல துணிந்தாயா?
உன் மணவாள கோலத்தை பார்க்கின்ற
வேளையில் நீ பிணவாள கோலத்தை
எல்லோர் மனக்கல்லறையிலே பதித்தாயா!
நீ இறைவனடி சென்றாலும் உன் ஆத்மா
என்றென்றும் சாந்தியடைய
நாம் வாய்க்காற் தரவைப் பிள்ளையாரை
பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"அன்பு இல்லம்"
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

உன் நிமிட கணங்களில்
அன்பு அப்பா, அக்காமார்,
தங்கைமார், மைத்துனன்மார்.

## காரைநகரில் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம்

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காரைநகர் பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்திப்பணிகள் பற்றி ஆராயப்பட உள்ளது. சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஜ- 73)

## மாணவர்களுக்கு உதவிக் கொடுப்பனவு இன்று வழங்கப்படும்

சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உயர்கல்வி மாணவர்களுக்கு டபிள்யூ.யு.எஸ்.சி. நிறுவனமும் றீடோ நிறுவனமும் இணைந்து உதவ உள்ளன. அந்த வகையில் சர்வதேச மாணவர் பேரவையின் ஆதரவில் தெரிவுசெய்யப்பட்ட முதல் 50 மாணவர்களுக்கு, உதவிக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக் கழகக் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கடந்த 4ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-202)

## வேலணை சமுர்த்தி வங்கி திறப்பு விழா நாளை

வேலணை சமுர்த்தி வங்கிச் சங்கத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், சங்கத்தை வைபவரீதியாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் திறந்துவைப்பார்.

இத்திறப்பு விழா கடந்த 26 ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுத் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-202)


## தமிழ்த்திறன் போட்டிகளின் திகதிகளில் மாற்றங்கள்

பாடசாலை மாணவர்களுக்கு இவ்வருடம் நடத்தப்படவிருந்த தமிழ்த்திறன் போட்டிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.தில்லைநடராசா சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் தமிழ்த்திறன் போட்டிகள் நடத்தும் திகதிகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பாடசாலை மட்டப் போட்டிகள் ஏப்ரல் 8 ஆம் திகதிக்கு முன்பாகவும், வலய மட்டப் போட்டிகள் மே 25 ஆம் திகதிக்கு முன்பாகவும் மாகாண மட்டப் போட்டிகள் ஜுன் ஐந்தாம் திகதிக்கு முன்பாகவும் நடத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அனுப்பப்பட்ட தமிழ்த்திறன் போட்டிகள் தொடர்பான சுற்றுநிருபத்தில் பாடசாலை மட்டப் போட்டிகள் மே 16ஆம் திகதிக்கு முன்பும், வலய மட்டப் போட்டிகள் ஜுன் 03 ஆம் திகதிக்கு முன்பும் மாகாண மட்டப் போட்டிகள் ஜுன் 17 ஆம் திகதி முன்பாகவும் நடத்தப்படல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சுற்றுநிருப மாற்றம் தொடர்பாகக் கடிதத்தின் பிரதியினை அந்தந்தக் கல்வி வலயப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாமென அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-117)





இருந்தபோது தெரியாத பெருமிதம்
இழந்த பின்னர் தெரிகிறது
விரிந்தபோது அறியாத வாசம்
விழுந்த பின்னர் வருகிறது.

அமரர்

### சொக்கலிங்கம் – மகாலிங்கம்

அவர்களின்

### ஆறாத் துயரின் ஓராண்டு நிறைவு

அன்புடையீர்!

இன்று 10.03.2005 வியாழக்கிழமை எங்கள் குடும்பத் தலைவர் எமைப்பிரிந்த ஓராண்டு நிறைவுநாளாகும். அவர் நினைவாக எங்கள் இல்லத்தில் நடைபெறும் சமயக்கிரியையிலும் மதிய போசனத்திலும் தங்களை எம்மோடு உடனிருக்க அழைக்கிறோம்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

(42865) (16-29)

அன்புடன்
குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 1920 - 06 - 15



ஆண்டவன் அடியில் 2004 - 02 - 20

### திருமதி சின்னப்பு அன்னம்

பண்பிலே தெய்வமாய், பாசத்தின்
திருவுருவாய் வாழ்ந்த தெய்வமே!
நிலையற்ற வாழ்வுதனில்
நல்லறமெனும் இல்லறம் நடத்தி
நன்மக்களை மாநிலத்தில் ஈன்று
சான்றோரெனக் கேட்டு
அகமகிழ்ந்து உளம்
பூரித்துப் பூரணமான தாயே!
எமை வாழவிட்டு நீர் சென்று
ஓராண்டு ஆகிறதம்மா
ஓராண்டென்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும்
மாறாது உங்கள் நினைவு...

பதிவாளர் ஒழுங்கை,
திருநெல்வேலி, கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(42856)(39-16-34-29)

உங்கள் நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 75 ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
ச.இராசபாக்கியம்
பிறப்பு:12.06.1939



திருமதி
ந.நாகசோதி
பிறப்பு:14.02.1964



செல்வி தி.நிரஞ்சனா
(விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வாழ்வகத்தை வதிவிடமாகக் கொண்ட மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவி)
பிறப்பு:16.12.1995



திருமதி நவசுஜிதா
பிறப்பு:09.05.1983

இறப்பு
26.12.2004



செல்வி சி.கீர்த்தனா
பிறப்பு:29.07.1999

கனவுகளைக் கலைத்திட்ட காரிருள் அலையே!
கனிந்த எம் உறவுகளைக் காவிச்சென்றதேனோ?
ஐவர் நீர் ஒன்றாய்ச் சேர்ந்து ஐம்பெரும் முத்துக்களானீர்
ஆனால், அவனியில் அவதியுறும் அன்பின் நிலை அறிவீரோ?
காலங்கள் பல கடந்தாலும் காத்திருப்போம் உம் கல்லறையருகே!

இன்று (10. 03. 2005) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற இவர்களின் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு,
தாழையடி.

(42864)(39-16-29)

- குடும்பத்தினர்.


## வட மாகாண மக்களுக்கு ஒரு நற்செய்தி!



செய்மதி தொலைக்காட்சித் துறையில் 14 வருட அனுபவமுள்ள இலங்கையின் ஒரேயொரு நிறுவனமான Sats - Tech நிறுவனம் செய்மதி தொலைக்காட்சி உபகரணங்களை நேரடியாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து உத்தரவாதத்துடன் விற்பனை செய்துவருகின்றது. Topfield மற்றும் DVB SUPER SLIM றிசீவர்களுக்கான வட மாகாணதிற்கான உத்தியோகபூர்வமான முகவர் Sats - Tech மட்டுமே என்பதை அறியத்தருகின்றோம்.

KU BAND DISH SYSTEM
ரூபா 13,000 இல் இருந்து
☆ கடும் மழை, பனி காலங்களிலும் தடைப்படாத Horizontal Offset dish Antenna
☆ ஒரு வருட உத்தரவாதம்
☆ விற்பனைக்குப் பிந்திய சேவை
☆ இலவச தொழில்நுட்ப ஆலோசனைகள்
☆ Free Channel Updating
☆ Free Software Updating

8' dish C Band System Rs. 20,000/- முதல்

8' dish C Band & KU Band System Rs.22,750/-

✪ குறிப்பு: உத்தரவாதமற்ற இந்தியன், சீனா றிசீவர்கள் நாம் விற்பனை செய்வதில்லை.

தொடர்புகளுக்கு:
**SATS - TECH ENGINEER'S**
(M/S National Video Center)
No.182, K.K.S. Road, (NEAR KULAPITY CHURCH)
KOKUVIL, JAFFNA.
Phone: 021 222 5908 / 0777 710785

(சி-41353) (26-29-16)

# 'சுனாமியால்' பெற்றோர், உறவுகளை இழந்த வன்னிச் சிறுவர்களின் உள் உணர்வுகள்

மனித வாழ்வில் எத்தனை இழப்புக்கள், துன்பங்கள், கஷ்டங்கள், பின்னடைவுகள். இத்தனைக்கும் மத்தியில் வாழ்க்கைச் சக்கரத்தைச் செலுத்தும் அற்புத பிறவியாக மனிதனின் வாழ்விலே முடியாது என்ற வார்த்தைக்கே இடமில்லை. 'முயன்றுபார் இமயமலை உன் காலடியில், சமுத்திரம் உன் கைகளில்' என்று கவிஞன் பாடியுள்ளான். இன்றைய காலகட்டத்தில் எம்முடைய வாழ்க்கையிலும் எத்தனையோ இழப்புக்கள். அதிலும் யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு மீள எழுகின்ற வேளையில் கடந்த வருடம் இறுதிப்பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தமான சுனாமியால் நாம் இழந்தவை ஏராளம், ஏராளம். கண்களின் முன்னே இரத்த பாசங்கள் அணுவணுவாக செத்து மடிந்த சோக வரலாற்றை எண்ணி மனங்குமிறி இயல்பு வாழ்வைத் தொலைத்து விட்ட எம் உறவுகள் எத்தனை, எத்தனை? அதிலும் தாய், தந்தையைப் பறிகொடுத்து விட்டு தனி மரங்களாக நிற்கின்ற பச்சிளம் பிஞ்சுகள் எத்தனை எத்தனை? இவர்களைத் தேற்றவேண்டியவர்கள் யார்? இவர்களை இப்படியே விட்டு விடலமா? அதிலும் பள்ளி மாணவச் செல்வங்களைத் தேற்றி, அவர்கள் வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்தவேண்டிய கட்டாய தேவை அனைவருக்கும் உண்டு.

இந்த வகையில் முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்களும் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரும் இணைந்து பாதிக்கப்பட்ட பாடசாலைகளில கல்வி பயிலும் மாணவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள், அரங்கச்செயற்பாடுகளூடாக வழங்கப்பட்டு வருகின்றன. காலை ஆராதனையின் பின் மாணவரை ஒன்றுகூட்டி அவர்களுடன் ஆடல், பாடல், விளையாட்டுக்கள், நாடக நிகழ்வுகள் ஊடாக மாணவர்களின் மனோநிலையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கற்பதற்கான சூழலை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கமாகும். இந்தவகையில், 01.03.2005 செவ்வாய்க்கிழமை கள்ளப்பாடு வித்தியாலயத்திலும் 02.03.2005 புதன்கிழமை முல்லைத்தீவு றோ.க. பாடசாலையிலும் 03.03.2005 வியாழன் முல்லை இந்து வித்தியாலயத்திலும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் தரம் 6 தொடக்கம் 8 வரையான மாணவர்களுடன் இச் செயற்பாடுகள் எம்மால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மாணவர்களுடன் பழகிய சந்தர்ப்பங்களில் அவர்களின் நடத்தைக் கோலங்கள், மன உணர்வுகள், அவர்கள் சார்பாக அவர்களுக்குக் கல்விகற்பிக்கும் ஆசிரியர்கள் கூறியவை, மாணவர்கள் எமக்குக் கூறியவைகளை இக்கட்டுரை ஊடாக வெளிக்கொணர்வதே எமது நோக்கமாகும்.

### கள்ளப்பாடு கிராமத்தில்...

முல்லைத்தீவுக் கரையோரக் கிராமங்களிலே அதிகமாகப் பாதிக்கப்பட்ட இடமாக கள்ளப்பாடு கிராமமே காணப்படுகின்றது. இப்போது கள்ளப்பாடு பாடசாலை, உண்ணாப்புலவு என்கின்ற இடத்தில் தற்காலிக கொட்டகையில் இயங்கி வருகின்றது. நாங்கள் செல்கின்ற போது பிள்ளைகள் யாவரும் மர நிழல்களில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் கதிரைகளில் வானமே கூரையாகக் கொண்டு புழுதிதோய்ந்த கால்களுடன் கற்றற்செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் வெய்யில் வந்திடும் எங்களால படிக்க ஏலாது. சரியான களைப்பாக்கிடக்கு பஸ்சில போறதே சரியான கஷ்டமாக்கிடக்கு" என்றார் ஒரு மாணவர்.

### அரவணைப்பாகக் கதைத்தபோது...

நாங்கள் அவர்களை ஒன்றாக்கி பாட்டுப் பாடினோம். அதிலே ஒரு சில பிள்ளைகள் தனியே விலகி நின்றனர். அவர்களுடன் எம்மவர்கள் சிலர் அரவணைப்பாகக் கதைத்த போதுதான் அவர்களின் அம்மா, அப்பா, சகோதரர்கள், கடல் அலைகளாலீ கொல்லப்பட்டதை உணரக்கூடியதாக இருந்தது. பின்னர் அவர்களைத் தேற்றி நாங்களும் அவர்களின் கைகளைப்பிடித்துக்கொண்டு ஆடல்பாடல்களில் ஈடுபட்டபோது அவர்கள் தங்களின் பழைய நிலையை மறந்து மற்றவர்களிலும் பார்க்கத் தங்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்தனர். இடையிடையே எம்மீது ஏறினார்கள், எம்மைக் கட்டித்தழுவினார்கள், எமது கரங்களை இறுகப்பற்றிப்பிடித்தனர். இவர்களைப் பற்றி ஆசிரியர்கள் கூறும்போது "இண்டைக்குத்தான் இவயள் உற்சாகமாகச் சிரிச்சு விளையாடியதப் பார்த்தனாங்க. இந்தப் பிள்ளையட்டையும் இப்பிடித்திறமையள் இருக்கெண்டு இப்பதான் தெரியுது. வகுப்பில பின்னுக்குத்தான் இருப்பினம். கனக்கக் கதைக்கமாட்டினம் இண்டைக்கு நீங்கதான் கதைக்க வைச்சிருக்கிறியள்" என்று குறிப்பிட்டார்.

### முல்லைத்தீவுப் பாடசாலையில்...

முல்லைத்தீவு றோ.க. பாடசாலைக்குச் சென்றோம். முதலில் பாட்டுப்பாடி அவர்களின் மனோநிலையைப் புரிந்துகொண்டபின் விளையாட்டில் ஈடுபட்டோம். 'எங்களுடன் எங்களின் ரீச்சர்மாரும் விளையாட வேணும்' என்றனர் "அப்படியே ரீச்சமார நீங்கள்தான் கூப்பிடவேணும் கூப்பிடுங்கோ" என்றோம். எல்லோரும் "ரீச்சர் வாருங்கோ, ரீச்சர் வாருங்கோ" எண்டு கத்திக் கத்தி ரீச்சர்மாரைத் தங்களோட விளையாட அழைத்தனர். இது அவர்களுக்கு புது உற்சாகத்தைக் கொடுத்தமாதிரி இருந்தது. ஒரு பிள்ளை தன் தாய், தகப்பன் எல்லோரையும் இழந்து நின்றான் சரியான குழப்படியா இருந்தான். "இப்பதான் இவன் இப்படி இருக்கிறான்" எனறு ரீச்சர் சொன்னார். எங்களில் ஒருவர் அவருடன் கதைத்த போது "ஒ..ஒ.. நான் குழப்படி செய்வன், ஆருக்கெண்டாலும் அடிக்க வேணும் போல கிடக்கு" என்று சொல்லிக் கொண்டு கண்ணில் பட்ட தடி தண்டுகளையெல்லாம் முறித்து எறிந்தான். அவனோடு நீண்டநேரம் மினக்கட்டு அவனை எங்கள் வழிக்குக்கொண்டு வந்தோம். பிறகு எல்லா விளையாட்டுக்களிலும் முன்னுக்கு நின்று செயற்பட்டதைக் காணக்கூடியதாய் இருந்தது.

### பயமும் பீதியும்

இடைவேளைக்குச் சிறுநீர் கழிக்கச்சென்ற மாணவிகள் தங்களுடன் படித்த ஒரு பிள்ளையின்ர புத்தகப்பையைக் கண்டுபோட்டு அதுக்குப் பக்கத்தில 40 பேரின்ர உடல்களை எரிச்சதால அந்தப்பிள்ளை, செத்தபிள்ளை வெள்ள உடுப்போட வந்து தங்களைக் கைகளைக் காட்டி வருமாறு கூப்பிட்டதாகவும், எல்லோரும் பேய் பேய் 'எண்டு கத்திக்கொண்டு ஓடி வந்ததாகவும், ஒருபிள்ளை நெத்தியில சிலுவை அடையாளம் போட அந்தப்பிள்ளை அப்பிடியே மறைந்து போச்சுதெண்டும் 02.03.2005 புதன் கிழமை றோ.க.பாடசாலை ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

"பிள்ளையள் சரியான பயத்தோடதான் இருக்கினம். முந்திய விட இப்ப சரியான குழப்படி எங்களாலையும் கண்டிக்க ஏலாமக் கிடக்கு.

காலமையள்ள பிரார்த்தனையிலையும் இவையள் சரியான கதையும் குழப்படியுமாக் கிடக்கு" எண்டு ஓர் ஆசிரியை குறிப்பிட்டார்.

"கட்டுப்பாட்டுப் பயிற்சிகளைக் கூடச் செய்தால் நல்லது" என்றார் ஓர் ஆசிரியர்.

"நீங்க இப்பிடிப் பாடி ஆடுறதெல்லாம் பாடத்தின்ர சிலபஸ்சோட போகுதே" என்று ஓர் ஆசிரியர் தன்னுடைய மனக்குமுறலை மற்ற ஆசிரியருடன பகிர்ந்து கொண்டதையும் எம்மால் அறிய முடிந்தது.

"கடவுள் வந்திட்டார் அவரிடம் நீங்க என்ன கேப்பியள் எண்டு கேட்டம்",

அதற்குப் பிள்ளையள், 1) சுனாமி இனி மேல் வரக்கூடாது 2) கடல் அலை கரைக்கு மேல வரக்கூடாது 3) கடற்கரையில அணை போடணும் 4) மரம் இருக்கவேணும் 5) மாடிக் கட்டடம் கட்டித்தரணும். 6) எங்கட அம்மா, அப்பா எங்கள விட்டுப்பிரியக் கூடாது. 7) செத்த ஆக்களெல்லாம் உயித்தெழ வேணும். 8) நல்லபடிப்புத் தரவேணும் இப்பிடியே அடுக்கிக்கொண்டு போனார்கள்.



தங்களை மறந்து ஆடிப்பாடும் குழந்தைகள்

முல்லைத்தீவு மகா வித்தியாலயம் மற்றும் இந்து வித்தியாலயம் ஆகிய பிள்ளைகளுடன் கடந்த 03.03.2005 அன்று செயற்பட்டபோது தியானப் பயிற்சியின்போது 'கண்களை மூடி உங்களில் அன்பானவரை கண் முன் நிறுத்தி நினையுங்கள்' என்றபோது பல பிள்ளைகள் வாய் விட்டுக் கதறி அழுதார்கள். தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். ஒரு பிள்ளை தன்னுடைய தோழி தன்னை விட்டுப் போய்விட்டார் என்று வாய் விட்டுக் கதறி அழுதாா். நீங்கள் எப்பிடித் தப்பி வந்தீர்கள், அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள் என்றதும் பிள்ளைகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். அந்த வேளை, அங்கு வந்த லண்டன் ஐ.பி.சி. வானொலியைச் சேர்ந்தவர்கள் அவர்களின் கதைகளை ஒலிப்பதிவு செய்துகொண்டு சென்றுள்ளார்கள். அண்மைய நாள்களில் இது ஒலிபரப்பாகலாம்.

"சுனாமியைப் பற்றி யாரும் கதைக்கக் கூடாதென்று கடும் கட்டளையை ஆசிரியர்கள் பிறப்பித்துள்ளார்கள்" என்று ஒரு மாணவன் குறிப்பிட்டான். உள்ளக்கிடக்கைகளை வெளியே கொட்டினால்தானே மனம் நிம்மதியடையும், கவலையை அழுதால்தானே தீர்க்கலாம், ஆத்திரத்தை எதையாவது உடைத்தால் தானே வெளிப்படுத்தமுடியும். சந்தோசத்தைச் சிரிப்பதன் ஊடாகவே தானே வெளிப்படுத்த முடியும். இவையெல்லாம் உளவியல் நிபுணர்களின் கருத்தாக உள்ளன.

**ம.றோமியல்**
ஆசிரியர்,
விஸ்வமடு மகா வித்தியாலயம்

இவ்வேளை, எப்படி எம்முடைய பிள்ளைகளை எம்மால் அடக்கி வைக்கமுடியும். மொத்தத்தில் ஆற்றுப்படுத்துகைக்குச் செல்வோர் வார்த்தைகளை விட்டுத் தங்கள் உடலை, உள்ளத்தை பிள்ளைகளிடம் கொடுக்கவேண்டும். பிள்ளைகளின் மனங்கள் வெல்லப்படவேண்டும் தொடுகை உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அவர்களில் நாமும் ஒருவராக மாற வேண்டும். அவர்களிடமிருந்து பிரிகின்ற போது அவர்கள் புழும்பாடுகளே எம்மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை உணர்வை எம்மால் அறியமுடிகின்றது. மொத்தத்தில் அவர்களின் மனங்கள் தேற்றமடைய நிறையவே செய்ய வேண்டியுள்ளது.



ஒவ்வொரு விழியிலும் ஒவ்வொரு சோகம்

# காரைநகர் துறைமுகத்துக்கு தனியான பஸ் சேவை ஆரம்பம்

காரைநகர்,மார்ச்10

காரைநகர் துறைமுகத்திற்கான பஸ் சேவை கடந்த வாரம் முதல் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பகுதிக்குக் காரைநகர் துறைமுகம் ஊடாகச் சென்றுவரும் பொதுமக்கள் இப்பகுதிக்குப் பஸ் சேவை நடைபெறாததால் நீண்டதூரம் கால் நடையாகச் செல்ல வேண்டி உள்ளதாக அண்மையில் காரைநகர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் க. ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து, ஊர்காவற்றுறை, காரைநகர் பாதைச் சேவை நடைபெறும் நேர ஒழுங்குக்கு அமைவாக பஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை காரைநகர்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காரைநகர் மேற்கு வீதி புனரமைக்கப்பட்டதையடுத்து இடைநிறுத்தப்பட்ட அனைத்து பஸ் சேவைகளும் தற்போது சீராக நடைபெற்று வருவதாகவும் அத்துடன், காரைநகர் சுற்று வீதி ஊடான போக்குவரத்தும் இடம்பெறுவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.(ஐ-73)



சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மாதகல் லூர்த்துமேரி கடற்றொழில் சங்கத்துக்கு கியூமெடிக்கா நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட பொருள்களை சங்கத்தின் உபதலைவர் எஸ்.தரிசனம், சமூக சேவையாளர் அ.யேசு ஆகியோர் சங்க அங்கத்தவர்களுக்கு விநியோகிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: மாதகல் செய்தியாளர்)

லஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு

# ஆனந்தராஜா பெயரை நிராகரித்தமை ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கு

## ஐ.தே.க. தவிசாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கொழும்பு,மார்ச்10

லஞ்ச ஊழல்கள் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவராகச் சிபாரிசு செய்யப்பட்ட முன்னாள் பொலீஸ்மா அதிபர் டி.ஆனந்தராஜாவின் பெயரை ஜனாதிபதி நிராகரித்தது அவரது சர்வாதிகாரப் போக்கையே வெளிப்படுத்துகின்றது.

லஞ்ச ஊழல்கள் மோசடி விசாரணை ஆணைக்குழு இயங்க ஆரம்பித்துவிட்டால் தனது சகாக்கள் பலர் மாட்டிக்கொள்வார்கள் என்ற பீதியிலேயே ஜனாதிபதி மேற்படி ஆணைக்குழுவைச் செயற்படவிடாமல் திட்டமிட்டுத் தடுத்து வருகின்றார்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின்படி உருவாக்கப்பட்ட அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர்கள் ஏகமனதாகச் சிபாரிசு செய்த ஒருவரின் பெயரைத் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி நிராகரித்தது மனிதாபிமான உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாகவே தோன்றுகின்றது. இக்கவுன்ஸிலில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஜனாதிபதியின் பிரதிநிதியும் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் வெகு நுணுக்கமாகப் பரிசீலனை செய்தபின்னரே இரண்டு ஓய்வுபெற்ற நீதிபதிகளின் பெயர்களையும் முன்னாள் பொலீஸ்மா அதிபர் டி.ஆனந்தராஜாவின் பெயரையும் சிபாரிசு செய்தனர். ஆனால், ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைக்கொண்டு ஆனந்தராஜாவின் பெயரை நிராகரித்துவிட்டார். இது அதிகாரத்தைக் கையில வைத்துக்கொண்டு ஜனாதிபதி நடத்தும் அராஜகச் செயல் இது - என்றார் அவர். (க-3)

## மதமாற்றத் தடைச்சட்டம் விரைவில் நாடாளுமன்றில்

மதமாற்றத் தடைச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச்சட்டமூல யோசனைகள் அரசமைப்பிற்கு முரணானவையல்லவென சட்டமா அதிபர் திணைக்களம் பௌத்தசாசன அமைச்சிற்கு அறிவித்திருக்கின்றது.

பௌத்தசாசன அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவினால் இச்சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது. மத அடிப்படைவாதக் கருத்துக்களைத் தெரிவித்து மக்களின் மனங்களை மாற்றியும் பலவந்தமாகவும் மதமாற்றம் செய்வோர் இந்தச்சட்டம் நடைமுறைக்கு வந்தால் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-3)

# பல்கலைப் பட்டம் வழங்கும் உரிமையை தனியார்துறைக்கு அரசு வழங்காது

கொழும்பு,மார்ச்10

தனியார் கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழகத் தரத்திலான இளநிலைப் பட்டம் வழங்க அரசு ஒருபோதும் அனுமதிக்காது என உயர் கல்விப் பிரதி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனங்கள் இரண்டிற்குப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பல்கலைக்கழகப் பட்டம் வழங்கும் அந்தஸ்தை வழங்கியுள்ளது. இது தொடர்பிலேயே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு முரண்பட்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தாலும், அரசு இதற்கு அனுமதிக்காது. யார் என்ன சொன்னாலும் இதுதான் அரசின் நிலைப்பாடு. இதிலிருந்து அரசு இறங்காது- என்றார்.

கொழும்பிலுள்ள அக்வைனாஸ் உயர் கல்லூரியும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனமும் பல்கலைக்கழகப் பட்டம் வழங்கும் அந்தஸ்திற்குரிய அனுமதியைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கியுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் ஆறாம் திகதியிலிருந்து இதற் கான அனுமதி, ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பிலுள்ள றோயல் நிறுவனம் இது தொடர்பிலான அனுமதிக்குக் காத்திருப்புப் பட்டியலில் உள்ளது எனவும் குறிப்பிடப்படுகிறது. (க-3)

# கொழும்பு சென்ற ரயிலில் தமிழ் இளைஞனிடம் ரகசியப் பொலீஸார் என்று கூறிக் கொள்ளை

## 40 ஆயிரம் ரூபா பணம், தங்க நகைகள் அபகரிப்பு

கொழும்பு,மார்ச்10

வவுனியாவிலிருந்து கொழும்பு வந்த ரயிலில பயணித்த தமிழ் இளைஞனிடமிருந்து தம்மை ரகசியப் பொலீஸார் என்று கூறிய நபர்களால் 40 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கம்பஹா ரயில் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த திங்கள் இரவு வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி வந்த ரயில் கம்பஹா ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டபோது நால்வர் ஏறினர்.

தம்மை ரகசியப் பொலீஸார் என்று கூறிய அவர்கள் ரயிலில் இருந்த தமிழ் இளைஞரை ரயிலில் இருந்து கீழே இறக்கி மறைவிடமொன்றுக்கு அழைத்துச் சென்றனர்.

அவரிடமிருந்து 40 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் அவர் அணிந்திருந்த தங்க ஆபரணங்களையும் அபகரித்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி வரும் ரயில்களில் நீண்டகாலமாகத் தமிழ்ப் பயணிகளின் உடைமைகள், கம்பஹா ரயில் நிலையத்தில் அபகரிக்கப்பட்டு வந்துள்ளன.

இதனைத் தடுப்பதற்காக விசேட பொலீஸ் குழுக்கள் கம்பஹா, கோட்டே மற்றும் மருதானை போன்ற ரயில் நிலையங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. எனினும், மீண்டும் வழிப்பறி கொள்ளையர்களின் கைவரிசை அதிகரித்துள்ளது எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

ரயில்களில் பயணிக்கும் தமிழர்களைத் நோட்டம் விடும் இந்த நபர்கள், பணம் வைத்திருப்பதை அடையாளம் கண்டு தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். மேற்படி சம்பவம் தொடர்பாகக் கம்பஹா பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

(க-3)

# பொலன்நறுவை, திம்புலாகலக் காட்டில் ஆயுதக்குழு; எதிர்க்கட்சித் தலைவரிடம் விவசாயிகள் முறையீடு

கொழும்பு,மார்ச்.10

பொலன்நறுவை, திம்புலாகலக் காட்டுப் பகுதியில் தமிழ் ஆயுதக்குழுவொன்று முகாம் அமைத்துள்ளதாக அப்பகுதி மக்கள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு விஜயம் செய்திருந்த சமயம் முறையிட்டுள்ளனர்.

அண்மையில் பொலன்நறுவைப் பகுதிக்கு எதிர்க்கட்சித்தலைவர் விஜயம் மேற்கொண்டிருந்தார். அப்பகுதியில் உள்ள விவசாயிகளையும் சந்தித்தார்.

அப்போதே இந்த விடயம் குறித்து விவசாயிகள் ரணிலிடம் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக இந்த ஆயுதக்குழுவினர் அப்பகுதியில் உள்ள விவசாயிகளை அச்சுறுத்தி உணவுப் பொருள்களை அபகரிக்கின்றனர் என்றும் - கப்பமாகப் பணம் பெறுகின்றனர் என்றும்- அவர்கள் ரணிலிடம் சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து இவ்விடயம் குறித்து ஆராய்வதற்கு ஐ.தே.கவின் உயர்மட்டக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரின் ஒத்துழைப்புடன் இந்த ஆயுதக்குழு செயற்படுவதாகவும் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. கடந்த சில தினங்களாக இவர்களின் நடமாட்டங்கள் இருக்கவில்லை எனவும் அறியவருகிறது.

ஐ.தே.க. அமைத்திருக்கும் விசாரணைக் குழு சமர்ப்பிக்கும் அறிக்கையைத் தொடர்ந்து எதிர்க்கட்சி மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பாக ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க-3)

## கிரிமிச்சையில் ஓட்டோச்சாரதி கடத்தப்பட்டார்

ஓட்டமாவடியிலிருந்து வாகரை கிரிமிச்சைக்குப் பயணம் செய்து கொண்டிருந்த ஓட்டோவின் சாரதியை இனந்தெரியாத சிலர் கடத்திச் சென்றனர்.

இரண்டாம் கட்டையில் வைத்து ஓட்டோ மீது சுட்டுவிட்டு அதன் சாரதியைக் கடத்திச் சென்றுள்ளனர்.

ஓட்டோவில் சென்ற ஏனைய மூவரும் தப்பியுள்ளனர். தப்பியவர்கள வாழைச்சேனைப் பொலீஸாரின் பாதுகாப்பில் உள்ளனர்.

ஓட்டோவையும் கைவிடப்பட்ட நிலையில் வாழைச்சேனை பொலீஸார் மீட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை மூன்று மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அப்துல் ஹமீத் றஹீம் (வயது 30) என்பவரே கடத்திச் செல்லப்பட்ட சாரதியாவார்.

சம்பவ இடத்திற்கு மாலை ஆறு மணியளவில் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளும், வாழைச் சேனைப் பொலஸாரும் விரைந்தனர்.

(க-3)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1952 07 22

விண்ணில் 2004 02 19



அமரர்
செல்லத்துரை நாகராசா (கிளி)

எங்கள் ஆருயிர் தெய்வமே!
பாசத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
சடுதியில் மறைந்து விட்டீர்களே அப்பா!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
ஓராண்டு மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சைவிட்டு அகலாது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம்,ஆனைக்கோட்டை.

தாய், மனைவி,
பிள்ளைகள்,
மருமகன், சகோதரர்கள்.

(42870) (56-14-45)



திருமணக் கார் (குளிரூட்டியது)
வாடகைக்கு

★ திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.



T.P.: 077-3086939,
0777-246117,
077-6018467. (42842) (21-34-45)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHO THERAPY)
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

11-03-2005 - 16-03-2005

முன்கூட்டியே பதிவு செய்யவும்

இளைஞர்களே!
☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம் ☆ நடுக்கம்
☆ நித்திரை குறைவு ☆ ஆண்மைக்குறைவு ☆ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்! ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(21-34-45) (சி-41373)
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

05. இடம்பெயர்ந்த விண்ணப்பதாரி விடயத்தில்:
1. தற்போதைய மாவட்டமும் மாகாணமும்:........................................
2. இடம்பெயர்ந்த ஆண்டு:........................ மாதம்.................... திகதி..................

| | | | |
|---|---|---|---|
| 06.1 பிறந்த திகதி: | வருடம்: | மாதம்: | திகதி: |
| 06.2 2005.03.31 ஆம் திகதியன்று வயது: | வருடங்கள்: | மாதங்கள்: | நாள்கள்: |

06.3 பால்:

| | | | |
|---|---|---|---|
| ஆண் M | | பெண் F | |

06.4 இனம்:........................................

06.5 விவாகமானவரா/விவாகமாகாதவரா:........................................

07. தெரிவுசெய்யும் பரீட்சை மாவட்டமும் மாவட்ட எண்ணும்........................................
(09பந்தியின் பிரகாரம்)

08. கல்வித் தகைமைகள்:

08.1 பட்டம் பற்றிய விவரங்கள்:
அ. பட்டம் பெற்ற பல்கலைக்கழகம்/நிறுவனம்:........................................
ஆ. பட்டத்தின் வகை:........................................
இ. பாடங்கள்:........................................
ஈ. சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி:........................................

08.2 ஏனைய தகைமைகள்:
........................................
........................................
........................................

09. பணியாற்ற விரும்பும் ஒழுங்கில் மாவட்டமும் மாவட்ட இலக்கமும் (பந்தி 09 இல் தரப்பட்ட இலக்கத்தைப் பயன்படுத்துக)

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

10. விருப்புரிமை ஒழுங்கில் நியமனம் பெறவிரும்பும் பதவி(ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் அபேட்சகருக்கு மட்டும் உரித்தானது) தயவுசெய்து ஒவ்வொரு பதவிக்குமான விண்ணப்பங்கள் தனித்தனியாக அனுப்பப்படல் வேண்டும் என்பதையும் அவ்வாறான விருப்புரிமை ஒழுங்கு ஒவ்வொரு விண்ணப்பத்திலும் காட்டப்படல்வேண்டும்.

| பதவி | பதவி இலக்கம் (அட்டவணையின் பிரகாரம்) |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

11. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

........................ஆகிய நான் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் மேலே சொல்லப்பட்ட சகல விவரங்களும் சரியானவை எனவும், உண்மையானவை எனவும், பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட..................பிரதேச செயலகத்தின் .......ஆம் இலக்க ....................ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது எனவும், இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன் எனவும் நான் அரசாங்கசேவையில் இருந்து நீக்கப்பட்டோ பதவியை விட்டுச்சென்ற ஒருவர் இல்லையெனவும் பிரகடனப்படுத்துகின்றேன். இங்கு என்னால் தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என அல்லது பிழையானவை எனத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பு தெரியவந்தால் நான் தகுதியற்றவனாவேன் எனவும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் அதுபற்றித் தெரியவந்தால் சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும், நான் அறிவேன். அத்துடன், இப்பதவி நியமனம் மற்றும் பணிபுரியும் நிலையம் என்பவை தொடர்பான சகல தீர்மானங்களையும் மேற்கொள்ளும் உரிமை மாகாண சபை நிர்வாகத்திற்கே உரியது என்பதையும் நான் அறிந்துள்ளேன்.

திகதி: ...............

........................
விண்ணப்பதாரி கையொப்பம்:

12. விண்ணப்ப பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலீஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 128,160/- இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரசசேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்படவேண்டும்.
விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி........................................

என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ........................................ஆம் திகதி
அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:...........

........................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்:
பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(மிகுதி IV ஆம் பக்கத்தில்)

13. வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்துக்கு இடம்பெயர்ந்துள்ளவர்களின் உபயோகத்திற்கு மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக/வதிவிடமாகக் கொண்டவர் என்பதையும், அவர் .................... திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ........................................ மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் இத்தற்காலிக வதிவிடத்தை ஆதாரமாக வைத்து இம்மாகாண சபையில் எப்பதவிக்கும் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:.............................

..............................................

பிரதேச செயலாளர்/

கிராம சேவையாளர் கையொப்பம்

பதவி:

முகவரி:

(பதவி முத்திரை)

14. அரசாங்க உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

திரு/திருமதி/செல்வி

................................................................................................ என்பவரின் விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கின்றேன். இவர் இவ்வமைச்சில்/திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிக/அமைய ஊழியர் ஒருவராகச் சேவையாற்றுகின்றார் எனவும், இப்பதவிக்காகத் தேர்ந் தெடுக்கப்படின் இவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும்/முடியாதெனவும் அறியத்தருகின்றேன்.

..............................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

அல்லது அதிகாரம் கையளிக்கப்பட்ட

உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி:

பதவிப் பெயர்:

அமைச்சு/திணைக்களம்.

# அட்டவணை

| பதவி இலக்கம் | பதவி | கல்வித் தகைமைகள் |
|---|---|---|
| 01. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - மனிதவளம் | முகாமைத்துவம் தொடர்பான ஏதாவது பட்டச்சான்றிதழ் அல்லது சமமான தகைமை |
| 02. | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிதி | வர்த்தகமாணி அல்லது வாணிப நிர்வாகமாணி அல்லது உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா (H.N.D.A) சான்றிதழ் அல்லது முகாமைத்துவமாணி அல்லது சமமான தகைமை. |
| 03. | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - தொழில்நுட்பம் | விஞ்ஞானமாணி (பொறியியல்) அல்லது பௌதிகவியலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டச்சான்றிதழ் அல்லது சமமான தகைமை. |
| 04. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - விவசாயம் | விஞ்ஞானமாணி (விவசாயம்) அல்லது தாவரவியலை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி அல்லது சமமான தகைமை |
| 05. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - கால்நடை அபிவிருத்தி | மிருக வைத்திய விஞ்ஞானமாணி அல்லது சமமான தகைமை |
| 06. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - தகவல் தொழில்நுட்பம் | கணனி விஞ்ஞான பட்டம்/தகவல் தொழில்நுட்பம்/முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) ஒரு பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது சமமான தகைமை |
| 07. | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - பொதுஅபிவிருத்தி | ஏதாவது பட்டச்சான்றிதழ் |
| 08. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - நிலப்பயன்பாடு | கலைமாணி (புவியியல்) அல்லது கலைமாணி (தோட்ட உட்கட்டமைப்பு) அல்லது வள முகாமைத்துவ பாடத்தைக்கொண்ட பட்டம் ஒன்று |
| 09. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - உள்ளூராட்சித் திணைக்களம் | ஏதாவது பட்டச்சான்றிதழ் |
| 10. | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - மக்கள் தொடர்பாடல் | தொடர்பாடலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டச்சான்றிதழ் |
| 11. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - சட்டம் | சட்டமாணிப் பட்டம் அல்லது சமமான தகைமை |
| 12. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - உளவியல் | உளவியலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டச் சான்றிதழ் அல்லது சமமான தகைமை |
| 13. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - சூழல் | சூழலியல் தொடர்பான ஒரு பாடத்தைக் கொண்ட பட்டச்சான்றிதழ் அல்லது சமமான தகைமை |
| 14. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - கல்வி | கல்வி ஒரு பாடமாகக் கொண்ட பட்டச்சான்றிதழ் அல்லது சமமான தகைமை |
| 15. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - புள்ளிவிவரம் | புள்ளிவிவரவியலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டச்சான்றிதழ் அல்லது சமமான தகைமை |
| 16. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - மொழிபெயர்ப்பு | ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டச்சான்றிதழ் |
| 17. | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - கடற்றொழில் | கடல்வளம் தொடர்பான ஒரு பாடத்தைக் கொண்ட பட்டச்சான்றிதழ் அல்லது சமமான தகைமை |
| 18. | நிகழ்ச்சித்திட்டஉதவியாளர் - சுகாதாரமும் சத்துணவும் | சுகாதாரமும் அல்லது சத்துணவு பற்றிய பாடங்களைக் கொண்ட பட்டச்சான்றிதழ் |
| 19. | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - மகளிர் - சிறுவர் | சமூகவியலை அல்லது உளவியலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டச்சான்றிதழ் அல்லது சமமான தகைமை |
| 20. | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - சுதேச மருத்துவம் | ஆயுள்வேதம்/சித்த/யுனானி/ஹோமியோபதி பட்டச் சான்றிதழ் |

(சி/41402)(33-32-26-42-14-17-34-45-15)

(முற்றும்)

# 130 தற்காலிகமான வீடுகளைக் கொண்ட குடியிருப்பு முல்லைத்தீவில் திறந்துவைப்பு

முல்லைத்தீவு,மார்ச்10

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் பராமரிக்கப்பட்டுவரும் மக்களுக்கான தற்காலிகக் குடியிருப்புக்களை அமைக்கும் வேலைத்திட்டச் செயற்பாடுகளை வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்திவருகின்றது.

நோர்வே நாட்டு நிதிப்பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் இவ்வேலைத்திட்டச் செயற்பாடுகளின் தொடர் நடவடிக்கையாக கடந்த 8ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் முல்லைதீவு உண்ணாப்புலவு என்னும் இடத்தில் 130 குடும்பங்களுக்கான தற்காலிக வீடுகளைக்கொண்ட மற்றுமொரு குடியிருப்பு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு முல்லைத்தீவு கள்ளப்பாடு என்னும் கரையோரக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து, முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் பராமரிக்கப்பட்டுவந்த குடும்பங்களே அங்கு குடியமர்த்தப்பட்ட குடும்பங்களாகும். இந்த மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பொறுத்து ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் சமையல் உபகரணங்கள், உலர் உணவுப் பொருள்கள், படுக்கை விரிப்புக்கள் என்பன உட்பட தலா ஆயிரம் ரூபா பணமும் முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் வழங்கப்பட்டன.

இந்த வீடுகள் கையளிப்பு நிகழ்வில், சுனாமிக்குப்பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர்களில் ஒருவரான வின்சன் உட்பட முல்லைத்தீவு மாவட்ட சுனாமிப் பேரலை அனர்த்த விசேட பணிப்பாளர் கே.பி.றெஜி, முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ராமமூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், கள்ளப்பாடு கிராம சேவையாளர், போராளிகள், பொதுமக்களெனப் பெருமளவானோர் கலந்துசிறப்பித்தனர். (8)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளைக்கூட்டம்

வட்டக்கச்சி,மார்ச் 10

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் சுகாதாரப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய கூட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமைக் காரியாலய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலும் இடம்பெறும். (8-405-202)

## கோட்டமட்ட உடற் பயிற்சி போட்டிகள் 15 ஆம் திகதி

முழங்காவில்,மார்ச்10

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (8-202-323)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மருந்துப் பொருள்கள் கையளிப்பு

வட்டக்கச்சி,மார்ச்10

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினரால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மருந்துப் பொருள்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் கே.கணேஸ், பொருளாளர் தி.சுபராஜிதன், நிர்வாக உறுப்பினர் சந்திரசேகரம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

கையளிக்கப்பட்ட மருந்துகளை வைத்தியசாலை மருந்தாளர் திருமதி கந்தசாமி பெற்றுக கொண்டார். (8-405-202)





இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் செயலாளர் கே.கணேஸ், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மருந்தாளர் திருமதி கந்தசாமிடம் மருந்துப் பொருள்களைக் கையளிப்பதையும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்).

# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர்மட்டக் குழு கிளிநொச்சிக்கு விஜயம்

வட்டக்கச்சி,மார்ச்10

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர் அதிகாரிகள் குழுவொன்று இன்று வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு வருகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருள்களை வழங்குவதற்காகவே இக்குழுவினர் வருகைதருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள், சீருடைகள் என்பவற்றை இக்குழுவினர் வழங்கவுள்ளதுடன் மக்களுக்கான உணவுப் பொருள்கள், உடுப்புடைவைகள் என்பவற்றையும் வழங்குவர்.

கிளிநொச்சி வரவுள்ள இக்குழுவில் சங்கத்தின் தலைமைப்பீடத்தலைவர் ஜெகத் பீ.அபேசிங்க, தேசிய செயலாளர் எஸ்.எச்.நிமால் குமார், தொடர்பாடல் பணிப்பாளர் ஹர்சா குணவர்த்தன, செயலணிக் குழுத் தலைவர் திஸ்ஸ மணில் அபேவிக்கிரம, நிதி ஆணைக்குழுத் தலைவர் பிரசன்ன தசாநாயக்க, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவிக்கான பணிப்பாளர் ரீ.சித்திரவேல் ஆகியோர் உட்பட 14பேர் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-202-405)

# முருகானந்தா ம.வி. பரிசளிப்பு சிறப்புற நடைபெற்றது

பரந்தன்,மார்ச்10

கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயப் பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய முதல்வர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கினை கிளிநொச்சி கல்விவலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதன், பரந்தன் பிரதேச பிறப்பு, இறப்பு பதிவாளர் திருமதி இந்திரா பத்மநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை பாடசாலை முதல்வர் எஸ்.மதுரநாயகம் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதன், கண்டாவளைக கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசகுலசிங்கம், கிளிநொச்சி மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.ஜீவராஜ் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினார்கள்.

தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் மாவீரர் நினைவான நினைவுப் பரிசில்கள் போன்றன வழங்கப்பட்டு மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (8-203-352)

## வன்னிச் செய்திகள்

கிளிநொச்சி முல்

# முல்லைத்தீவு வர்த்தகர் சங்கத்தை மீளமைக்க உதவுமாறு கோரிக்கை

## அரச அதிபருக்குக் கடிதம்

பரந்தன்,மார்ச்10

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு வர்த்தகர் சங்கத்தை மீளக் கட்டியெழுப்ப உதவுமாறு சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கு சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எந்தவொரு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் வர்த்தக சமூகத்திற்கு எதுவித கொடுப்பனவுகளையோ உதவிகளையோ வழங்குவதற்கு முன்வரவில்லை.

வர்த்தகத் துறையினராகிய நாம் வங்கிக் கடன்கள், நிறுவனக் கடன்கள், தனியார் வட்டிக் கடன்கள் போன்றவற்றைக் கொண்டுதான் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சுனாமி அனர்த்தத்தால் சொத்துக்களை இழந்துள்ள நாம், கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையில் உள்ளோம்.

எனவே, பாதிக்கப்பட்ட எமக்கு உடனடித் தேவைக்கான பொருள்களைப் பெற்றுத் தரவேண்டும். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மாதாந்த உதவிக் கொடுப்பனவையும் ஏனைய கொடுப்பனவுகளையும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈட்டினை விரைவாகப் பெற்றுத் தருவதுடன் வர்த்தகத்தை மீள ஆரம்பிப்பதற்கு மானியங்களையும் வழங்க வேண்டும். அத்துடன் அரச வங்கிகளிலிருந்து கடன்களைப் பெறுவதற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது. (8-352-202)

## பாடசாலையின் பெயர்மாற்றம்

மல்லாவி,மார்ச்10

வவுனிக்குளம் படிவம் -4 அ.த.க.பாடசாலையின் பெயர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தீர்மானத்திற்கமைய திருநகர் தமிழ் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப் பெயர் மாற்றத்திற்கான சம்பிரதாயபூர்வ நிகழ்வு அண்மையில் அதிபர் த.அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் துணுக்காய் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா புதிய பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். (8-322-202)

## திலீபன் மருத்துவமனையின் நடமாடும் சேவை

மல்லாவி,மார்ச்10

ஐயன்கண்குள தியாகி திலீபன் மருத்துவமனையின் நடமாடும் மருத்துவசேவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் 4 கிராமங்களில நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் தேராங்கண்டல் கிராமத்திலும் - பிரதி வியாழக்கிழமைகளில காலை 9மணிமுதல் முற்பகல் 11 மணி வரை தெண்ணியன் குளத்திலும், பிற்பகல் ஒரு மணி முதல் 2.30 வரை கோட்டை கட்டிய குளத்திலும், பிற்பகல் 3 மணி முதல் மாலை 4 மணி வரை அம்பலப் பெருமாள் குளத்திலும் நடமாடும் மருத்துவ சேவை நடைபெறும் என்று போராளி மருத்துவர் சீ.ஈழவாணி அறிவித்துள்ளார். (8-202-322)



கிளிநொச்சி வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் மாணவ முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டு விழா அண்மையில் நடைபெற்றது. கிளிநொச்சி வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், பூநகரிக் கோட்டக்கல்வி அலுவலர் நி.கணபதிப்பிள்ளை ஆகியோர் மாணவ முதல்வர்களுக்குச் சின்னங்களை அணிவிப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: முழங்காவில் செய்தியாளர்)

# விமான சேவை

**யாழ்ப்பாணம் -> கொழும்பு -> யாழ்ப்பாணம்**


உங்கள் விரைவான பயணத்திற்கு சகல விமானத்திற்குமான பயணச்சீட்டுக்களை 24 மணி நேரமும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சந்து ரவல்ஸ், புதிய உயர் கல்லூரி வளாகம், 95, அரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

T.P.: 021 - 222 3208, 077 3151358, 077 3144762

(42900)(23-33-16-18)


உ
சிவசக்தி துணை





**கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி**
**பழைய காளி கோயில் ஸ்ரீ சிவ மஹா காளி அம்பாள் தேவஸ்தானம்**
**மண்டலப் பூர்த்தி மஹா சங்காபிஷேகம்**
**11.03.2005 வெள்ளிக்கிழமை**

அம்பிகை அடியார்களே!

10.03.2005 வியாழக்கிழமை மாலை
**கர்மாரம்பம்**

11.03.2005 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல்
**ஸ்ரீ சிவமஹா காளி அம்பாளுக்கும் ஸ்ரீகாசி ஐஸ்வரருக்கும் 1008 சங்காபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து இலட்சார்ச்சனையும் மாகேஸ்வர பூஜையும் நடைபெறும்.**

மாலை 6.00 மணிமுதல்
**திருவூஞ்சல் நடைபெற்றுப் பின்பு பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி திருவீதியுலா இடம்பெறும்.**
**அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.**

இறைபணியில்
பழனியப்பா, பொன்னுத்துரை, சந்திரசேகரம்பிள்ளை, கனகசிங்கம் குடும்பங்கள்.

(C\41389)(50-17-15-42-23-16-18)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 660 |
| திகதி | 08-3-2005 |
| டிக்கட்டின் நிறம் - ஊதா | |
| செல்லுபடியாகும் தொடர் இல. | 4334462 - 4349505 |

வெற்றி இலக்கங்கள் [illegible] 24 32 46

லக்கினம் தனுசு

ஜக்பொட் பரிசு ரூபா.17,64,800/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| [illegible] இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,28,435 | 10/- | 32,84,350/- |
| 2.இலக்கங்கள் | 30,144 | 20/- | 6,02,880/- |
| 1.இல + லக்கினம் | 29,799 | 30/- | 8,93,970/- |
| 2.இல + லக்கினம் | 2,817 | 100/- | 2,81,700/- |
| 3.இலக்கங்கள் | 793 | 500/- | 3,96,500/- |
| 3.இல + லக்கினம் | 73 | 5,000/- | 3,65,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 17,64,800/- | 17,64,800/- |
| மொத்தம் | 3,92,070 | - | 89,41,450/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 89,41,450/-

தொடர் இல. 5299729 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை.
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4344965-5-72
4335566-1-91
4344601-0-49
4339332-3-08
4343239-3-39


# விவசாயிகள் இருவரது நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஒரே நாளில் திருட்டு

வலி.தென்மேற்கு,மார்ச்10

சில்லாலை வடக்கில் இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் இரவு நேரத்தில் திருட்டுப் போயுள்ளன.

கடந்த வாரம் இரவு வேளையில் தங்கள் வயல் காணியில் பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சி விட்டு மறுநாள் காலையில் தொடர்ந்தும் நீர் இறைப்பதற்காக கிணற்றடியில் விடப்பட்டிருந்த இரு விவசாயிகளின் நீர் இறைக்கும் இயந்திரங்களே இவ்வாறு திருட்டுப்போயுள்ளன.

இத்திருட்டுப் பற்றி விவசாயிகள் இருவரும் இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ-135)

# ஆவரங்காலில் பிக். அப் - லொறி மோதுண்டன

கொழும்புத்துறை,மார்ச்10

ஆவரங்கால் சந்திப் பகுதியில் நேற்றுமுன் தினம் மாலை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வாகனமும் பாரவூர்தி ஒன்றும் மோதியதில் இருவாகனங்களும் சேதமடைந்தன. தெய்வதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த போர்நிறுத்தக் காண் காணிப்புக் குழுவினரின் பிக்.அப் மீது பின்புறமாக வந்த பாரவூர்தி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ஐ-30)

# 'புலரி' இரண்டாவது இதழ் வெளிவந்தது

யாழ்ப்பாணம், மார்ச்10

சித்தன்கேணி கலைஇலக்கியவட்டத்தின் வெளியீடான 'புலரி' காலாண்டு சஞ்சிகையின் இரண்டாவது இதழ் நேற்றுமுன்தினம் வெளிவந்துள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸின் நேர்காணல், கவிஞர்கள் சோ.பத்மநாதன், கி.ஜெயசீலன், கணேசமூர்த்தி ஆகியோரின் கவிதைகள், தொல்புரம் சி.கதிர்காமநாதனின் சிறுகதை, கலாநிதி ம.இரகுநாதனின் விசேட கட்டுரை ஆகியன இதில் இடம்பெற்றிருக்கின்றன.

கலைஇலக்கிய சமூகக் கருத்துக்களை உள வாங்கி 'புலரி' தொடர்ந்தும் காலாண்டு சஞ்சிகையாக வெளிவந்துள்ளது என்று அதன் ஆசிரியர் என்.குகபரன் தெரிவித்தார். (த-13)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் புற்றுநோய் சிகிச்சை

வலி.தென்மேற்கு, மார்ச்10

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு கடந்த திங்கட்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

பிரதி திங்கட்கிழமைகளில் பிற்பகல் 2 மணி முதல் புற்றுநோய் நிபுணர் டாக்டர் ஜெயக்குமார் நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பார்.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த புற்றுநோயாளர்கள் திங்கட்கிழமைகளில் வந்து சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியுமென வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன் அறிவித்துள்ளார்.

பிரதேச மக்களின் நலன்கருதி வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாகவே புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு இயங்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8-117)

# சுகாதார சேவைகள் தொடர்பான கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு, மார்ச்10

தமிழீழ சுகாதார சேவைகள் வேலைத்திட்டம் பற்றிய கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான அழைப்புக் கடிதம் சகல சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களினதும் மற்றும் அரசின் வைத்தியசாலைகளினதும் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நிறுவனத் தலைவர்களைக் கேட்டுள்ளார். (ஐ-135)

# திருகோணமலையில் மகளிர் தினம்

திருகோணமலை,மார்ச்10

திருகோணமலையில் சர்வதேச மகளிர்தினம நேற்றுமுன்தினம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், மகளிர் பிரிவு பொறுப்பாளர் காருண்யா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மகளிர்தின வைபவத்தில் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றக்கூடாது எனப் பொலீஸார் கட்டளையிட்ட போதும் கொடியேற்றத் துடனேயே நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-151)

# காரைநகர் ப.நோ.கூ.சங்க கிராமிய வங்கி மீதி உறுதிப்படுத்தல் - 31.08.2003

மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமியவங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது கணக்கு மீதிகளை 11.03.2005, 14.03.2005 ஆம் திகதிகளில் கடமை நேரத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

பொது முகாமையாளர்
ப.நோ.கூ.சங்கம்
காரைநகர்.

(சி41399)(23-38-16-18)

# ஹற்றன் நஷனல் வங்கி

யாழ்ப்பாணம்

**அடகுப் பொருள்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்**

**எமது கிளையில் அடகுச் சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு!**

நீங்கள் பெற்றுள்ள அடக்குக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒரு வருட காலத்துக்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் அறியத்தருகிறோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி கடனின் காலாவதித் திகதியினை நீடித்துக்கொள்ளலாம்.

ஒரு வருடகாலத்துக்கு மேற்பட்ட அடகுப் பொருள்களை மீட்க காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருள்கள் **19.03.2005** அன்று ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

- முகாமையாளர்.

(சி41398)(23-16-18)

# 2 ஆம் ஆண்டு இதய ஆஞ்சலி

*பிறப்பு* 05-06-1976 *இறப்பு* 10-03-2003



**சீவ் எஞ்சினியர்**
**அம்பிகைவாணன்**

## தவராசா புலேந்திரன் (கரன்)

அம்பிகைவாணனே! ஆண்டு இரண்டு சென்றாலும் கரனே உனை என்றென்றும் மறக்கமாட்டோம்!

தகவல்: து.தவராசா அரியம், 85/3A, AV றோட், கொழும்புத்துறை.

அப்பா, அம்மம்மா, சகோதரன், மாமா, மச்சான்.

(42903)(23-16-18)

**இவருடன் காலமான பத்து அன்புள்ளங்களுக்கும் நாம் வணக்கஞ்செலுத்தி நினைவு கூருகின்றோம்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 18 - 12 - 1939



இறப்பு 08 - 02 - 2005

## அமரர் தம்பையா சோமசுந்தரம்

*(சரவணை மேற்கு, வேலணை)*

**இன்று (10-03-2005) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*62/5, அன்னசத்திர லேன், முதலாம் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (42908)(23-16-18)

*உங்கள் பிரிவால் துயருறும்:* மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## வைரமுத்து தியாகராசா

நாவற்குழி கிழக்கு, கோவிலாக்கண்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட வைரமுத்து தியாகராசா நேற்று (09-03-2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் இராசமணியின் அன்புக் கணவரும் சௌந்தரராசா (கனடா), திலகநாதன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (கனடா), சிவநாதன் (கனடா), உதயகுமாரி (லண்டன்), உதயமாலா, கலையரசி (பிரான்ஸ்), மணிமாறன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயபாரதி (கனடா), யோகராணி (சுவிஸ்), அகிலா (கனடா), சுமதா (ஆசிரியர்), புஸ்பநாதன் (லண்டன்), நகுலேஸ்வரன் (கனடா), சற்குணநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தனுஷன், தனுஷா, திலக்ஷன், யொபி, தினேஸ், திஷானி, திலக்ஷின், அக்சியா ஆகியோரின் பாசமிகு பேரனும் நடராசா (லண்டன்), காலஞ்சென்ற சரவணமுத்து, நல்லம்மா, ஜெகராசா, வேலய்யா, சீனிவாசன் (லண்டன்), பராசக்தி (லண்டன்), தங்கரத்தினம் (ஜேர்மனி), பரராசசிங்கம், சிவராசா (ஜேர்மனி), நாகேஸ்வரி, பரமேஸ்வரி (லண்டன்), அழகராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கிருஷ்ணன், பொன்னம்மா (டென்மார்க்), நாகராசா, தங்கமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கபடும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*நாவற்குழி கிழக்கு, கோவிலாக்கண்டி மேற்கு.* (42904)(23-35-16-18)

தகவல்: வை.ஜெகராசா (சகோதரர்).





நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற 'உதைபந்தாட்டம்' நூல் வெளியீட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நூலின் பிரதியை யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கத் தலைவர் கப்டன் டி.என்.குணசிங்கத்திடமிருந்து வலைபந்தாட்டச் சங்கப் பயிற்றுவிப்பாளர் திருமதி ஏ.எல்.ஜே.ரூபசிங்கம் பெற்றுக்கொள்வதை முதலாவது படத்தில் காணலாம்.

நூலாசிரியர் டேவிட் தம்பிராஜா பதிலுரையாற்றுவதையும் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் விளையாட்டுப் பணிப்பாளர் மரியதாஸ், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்: பகீரதன்)*

# 'உதைபந்தாட்டம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச்10

யாழ்.மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சிச் சங்கத்தினால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி சேகரிக்கும் முகமாக 'உதைபந்தாட்டம்' என்னும் நூல் நேற்று வெளியிட்டுவைக்கப்பட்டது.

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை தலைமையில் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் தலைமையுரையைத் தொடர்ந்து நூல் ஆய்வுரையை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் உடற்கல்வி விரிவுரையாளர் ஜதுகுலசிங்கம் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலை யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கத் தலைவர் கப்டன் டி.என்.குணசிங்கம் வெளியிட்டுவைத்தார்.

நூலில் முதற்பிரதியை பாண்டியன்தாழ்வு வெதுப்பக உரிமையாளர் எஸ். ஜீவாவும் இரண்டாவது பிரதியை யாழ்.மத்திய கல்லூரி வர்த்தகப் பிரிவுத் தலைவர் அ.திரிலோகநாதனும் மூன்றாவது பிரதியை யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளர் திருமதி ரூபசிங்கமும் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்ற இந்நிகழ்வில் விளையாட்டுத்துறையைச் சார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் யாழ்மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சிச் சங்கத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. (த-12-86)

## மாவை எம்.பி. நிதி ஒதுக்கீடு

வலி.தெற்கு,மார்ச்10

அளவெட்டியிலுள்ள மகாசபை முன்பள்ளிக் கட்டடத்துக்கான மிகுதி வேலைகளை இவ்வருடம் பூர்த்திசெய்து கொள்வதற்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து இவ்வேலைகளுக்கென ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாவை மாவை சேனாதிராசா வழங்கியுள்ளார்.

கடந்தவருடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு லட்சம் ரூபாவைக் கொண்டு முன்பள்ளிக்கான ஆரம்பகட்ட வேலைகள் நடைபெற்றுள்ளன.

மிகுதியாகவுள்ள கட்டட வேலைகள் இந்த நிதியைக் கொண்டு பூர்த்திசெய்யப்படும் எனவும் இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக அளவெட்டி மகா சபையின் தலைவர் வை.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (த-152)

# 'தூயமனதுடன்' நாடக நூல் இன்று விசுவமடுவில் வெளியீடு

பரந்தன்,மார்ச்10

விசுவமடு ப.ரங்கநாதனின் (பரமபுத்திரன்) வானொலி நாடகங்களின் தொகுப்பான 'தூயமனத்துடன்' என்னும் நூல்வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் விசுவமடு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விசுவமடு மகா வித்தியாலய அதிபர் ஐ.கே. தவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் - வெளியீட்டுரை, ஆய்வுரைகள், சிறப்புரைகள் என்பன இடம்பெறவுள்ளன.

வானொலி நாடகங்களான - "தூயமனதுடன்", "பிள்ளைக்காகவா?", "வெகுமதி", "உள்ளதை உள்ளபடி", "திசை தெரிகிறது","எங்களுக்கும் அனைவருக்கும் மகுடம்" ஆகியவற்றின் தொகுப்பே இந்நூலாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-13-352)

## உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்10

இணுவில் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவ மன்றத்தினரின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உயர்தர மாணவர் மன்றத்தின் தலைவர் என்.போல் அன்ரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக 'நிகொட்' நிறுவனத்தின் பிரதித் திட்டப்பணிப்பாளர் க.நவரத்தினராசாவும் சிறப்புவிருந்தினராக உடுவில் பிரதேச செயலர் எஸ்.கிருபாகரனும் இணுவில் இந்துவின் பழைய மாணவன் சி.சண்முகலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(த-13)


**மருந்து விற்பனையாளர் தேவை**

ஆங்கில மருந்து விற்பனையில் அனுபவமுள்ளவர் தேவை.

தொடர்பு:

**ஆதவன் மருந்தகம்**

கைதடிச் சந்தி, கைதடி.

(42898)(29-16-18)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆங்கிலத்தில் சுலபமாகக் கதைக்கப் பயில, புதிய பிரிவு 6 மாதகாலம் கட்டணம் 1000/=. திங்கள், செவ்வாய், புதன் மு.ப. 11.30, பி.ப. 3 மணி

By:விக்னேஸ்வரன் ஆச்சாா

426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்

உ

அம்மன் துணை

**மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பங்குனித் திங்கள் உற்சவம்**

*அம்பிகை அடியார்களே!*

இந்த ஆண்டு பங்குனித் திங்கள் உற்சவமானது

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

காலை 8.00 மணிக்கு அபிஷேகம்

காலை 9.00 மணிக்கு பூஜையும் உற்சவமும்

மாலை 4.00 மணிக்கு அபிஷேகம்

மாலை 5.00 மணிக்கு பூஜையும் உற்சவமும்

மார்ச் 14, 21, 28 ஏப்ரல் 4,11 ஆகிய திகதிகளில் பங்குனித் திங்கள் உற்சவமும் நடைபெறும்.

☞ உற்சவத்தை முன்னிட்டு 12.03.2005 சனி பிற்பகல் 3 மணி தொடக்கம் கடைகள் கொடுக்கப்படும். ஐஸ்பழ வான்காரரும் மற்றும் கடைக்காரர்களும் கடை நடத்துவதற்கான இடத்தை எடுத்து பணம் முழுவதையும் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும். மற்றைய ஐஸ்பழ வான்காரர்களுக்கு திங்கட்கிழமைகளில் வியாபாரத்துக்கு இடம் வழங்கப்பட்டமாட்டாது.

மட்டுவில் வடக்கு. - சி.சிவகுரு தர்மகர்த்தா.

(42901)(29-16-18)



**உயர்திரு.க.தேவராஜா**

*வணிகத்துறைத் தலைவர்*

*யாழ்.பல்கலைக்கழகம் அவர்களது*

**54 ஆவது அகவையையொட்டி தேவா பொன்விழாச் சபையால் நடத்தப்படும் பரிசளிப்பு விழாவும்**

மருத்துவ சேவைக்கு ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்படும்.

காலம்: இன்று (10.03.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3.00

தலைவர்: திரு.க.கனகராசா

(அதிபர். வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம். தேவா பொன்விழாச் சபை உப செயலாளர்)

இடம்: இணுவில் பொது நூலக கலாசார மண்டபம்

*குறிப்பு:* பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கலும் மருத்துவ சேவைக்கென ஒரு லட்சம் ரூபாய் நிதி வழங்குதலும் இடம்பெறும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தேவா பொன்விழாச் சபை.

(42909)(18-29-16)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு இளையதளபதி விஜய் (சிறப்புத் தோற்றம்). நயீசா, ரவிகிருஷ்ணா, ரம்பா நடிக்க

**சுக்ரன்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

அடுத்த வெளியீடு: நாளை முதல் சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்) நடிப்பில் **மாயாவி**

(C/41376)(29-16-18)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது

விஜய், சங்கவி, சுபலட்சுமி நடித்த

**நிலாவே வா** (ரீல்ஸ்)

காட்சி நேரங்கள்: 10.30. 2.30. 6.30. 9.30. (பு.நே.)

பலருடைய பாராட்டுக்களைப் பெற்ற இத்திரைப்படம் முதல் முதலாக இலங்கையில் திரையிடப்படுகின்றது.

(C/41379)(29-16-18)

**ராஜா** யாழ்ப்பாணம்

கடைசிவாரம் சிம்பு (இருவேடம்), ஜோதிகா, நடித்த

**மன்மதன்**

காட்சி நேரம்:- 10.30,2.30,6.30. (பு.நே) (ரீல்ஸ்)

(C/41381)(29-16-18)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சிம்பு, சோனியா அகர்வால் நடித்த

**கோவில்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.)

(C/41377)(29-16-18)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

சரத்குமார், நமிதா, வடிவேல், கபாலி நடித்த



**ஏய்** (ரீல்ஸ்)

தினசரி 11.00. 3.00. 7.00 (பு.நே)

(C/41380)(29-16-18)

**சிறுநீரகம் தேவை**

33 வயதுடைய எனது மகனுக்கு சிறுநீரகம் அவசியம் தேவைப்படுகின்றது. வழங்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும் . தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

310, பருத்தித்துறை வீதி,

(மாநகர சபை தீயணைப்பு அலுவலகம் முன்பாக)

நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே.இல.: 077 - 614 -6484, 077- 609 -4608

தகவல்: ச.சேவியதாஸ் (தந்தை).

(சி-41407)(29-16-18)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் செல்லத்துரை

காரைநகர், களபூமி திக்கரையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்லத்துரை அவர்கள் 04.03.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் செல்வநாயகியின் அன்புக் கணவரும் ஜேர்மனியை வதிவிடமாகக் கொண்ட ஜெயமோகன், தவநாதன், கங்காதரன், தவராஜா, யோகசித்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காரைநகர் பொன்னாவாளையைச் சேர்ந்த கணேசப்பெருமாள், ஏகாம்பரம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வாலாம்பிகை, தெய்வானை, காலஞ்சென்ற சபாரத்தினம், தெய்வேந்திரன்,பரமசாமி, சண்முகராஜா, தவமணி, மங்கையர்க்கரசி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் பாக்கியலட்சுமி, ரோகிணி, ரட்ணசிங்கம், சண்முகலிங்கம், சந்திரன் ஆகியோரின் சகலனும் மயில்வாகனம் (பிரான்ஸ்), ரஞ்சனாதேவி (வவுனியா), ஜேர்மனியை வதிவிடமாகக் கொண்ட மகேந்திரன், தவேந்திரன், இராசேந்திரன், ஜெகதாம்பிகை (யா/யாழ்ற்ரன கல்லூரி, ஆசிரியை), லலிதாம்பிகை (வட்டுக்கோட்டை) ஆகியோரின் சிறிய தந்தையும் பிரபாகரன் (லண்டன்), மனோகரன், சர்மிளா, ஜேர்மனியைச் சேர்ந்த அஜந்தா, சிவமலர், சுமதி, நாகராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2005) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திக்கரை வீதி, களபூமி, காரைநகர்.*

தகவல்: சகோதரர்கள்.

(சி-41403)(29-16-18)


**IDM (PVT)LTD.**

**Authorized ICT Education, JAFFNA Centre**

IDM The Nation's ICT Academy

**முக்கிய அறிவித்தல்**

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (11/03/2005) அன்று மாலை 4.45 மணியளவில் யா/வைத்தீஸ்வராக்-கல்லூரி பிரதான மண்டபத்தில் அனைத்துமாணவர்களுக்குமான கல்விச் சுற்றுலா, மற்றும் கொழும்பில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் கணணிப் பயிற்சி தொடர்பான கலந்துரையாடல் நடை பெறவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடலுக்கு அனைத்து மாணவர்களும் தேசிய அடையாள அட்டையுடன் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். **(மாணவர்களின் வருகை பதிவுக்குட்படுத்தப்படும்)**

*Be brave and try new things*

- நிர்வாகி

(சி-41405)(18-29-16)

451, K.K.S ROAD, JAFFNA TEL: 021 4591398

# கிரிமிச்சையில் காணாமற்போன ஓட்டோச்சாரதி சடலமாக மீட்பு!

## ஓட்டமாவடியில் பதற்றம்; நேற்று ஹர்த்தால்

காத்தான்குடி, மார்ச்10

வாகரை, கிரிமிச்சைப் பகுதியில்நேற்று முன்தினம் கடத்திச்செல்லப்பட்ட முஸ்லிம் இளைஞர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார். சடலத்தின் கழுத்தில் வெட்டுக்காயம் காணப்பட்டது. இவர் கொலைசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் அப்துல் ஹமீது அப்துல் றஹீம் (வயது -24) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது கொலையைக் கண்டித்து ஓட்டமாவடி நகரில் நேற்றுக்காலை கடையடைப்பு இடம்பெற்றது. அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டு நகரம் வெறிச்சோடியது. மக்கள் பதற்றத்தின் மத்தியில் காணப்பட்டனர்.

ஓட்டமாவடி, புளியடி வீதியைச்சேர்ந்தவர் அப்துல் றஹீம், ஒட்டோச் சாரதியான இவர் வேறு மூவருடன் நேற்று முன்தினம் மாலை மதுரங்கேணிக்குச் சென்றுகொண்டிருந்தார். திடீரென இனந்தெரியாத சிலர் ஓட்டோ நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இதையடுத்து, ஓட்டோவில் இருந்த ஏனைய மூவரும் தப்பி ஓடிவிட்டனர். சுட்டவர்கள் ஓட்டோவுடன் றஹீமைக் கடத்திச்சென்றனர் என்று கூறப்படுகிறது.

தப்பிச் சென்ற மூவரும் பொலீஸாருக்குக் கொடுத்த தகவலின்பேரில் பொலீஸார் அங்கு தேடுதல் நடத்தினர். கிரிமிச்சைப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கிடந்த ஓட்டோவை அவர்கள் மீட்டனர். எனினும் அதன் சாரதி என்னவானார் என அப்போது தெரியவில்லை.

நேற்றுக்காலை அப்பகுதியில் பொலீஸார் நடத்திய தேடுதலில் கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் றஹீமின் சடலம் மீட்கப்பட்டது.

இவர் காணாமற்போனதையடுத்து, நேற்று முன்தினம் மாலையே அப்பகுதியில் பதற்றம் பரவ ஆரம்பித்திருந்தது. நேற்றுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கொலைக்கான காரணம் தெரியவரவில்லை. வாழைச்சேனைப் பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-க)

(முன்னர் வந்த செய்தி 10 ஆம்பக்கத்தில் )

## உலக வங்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிப் பிரதிநிதி வெள்ளையப் புலியா?" இறைமையை மதிக்காத பீற்றர் ஹெரோல்டே! நாட்டை விட்டு வெளியேறு" போன்ற வாசகங்கள் மும்மொழியிலும் சுவரொட்டிகளில் அச்சிடப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. இன்றைய ஆர்ப்பாட்டத்தை ஒட்டி உலக வங்கி அலுவலகத்தினை அண்டிய பகுதிகளில் கடுமையான பொலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

கடந்தவாரம் ஆங்கிலவார இதழ் ஒன்றுக்கு பீற்றர் ஹெரோல்ட் அளித்த பேட்டி புலிகளுக்கு ஆதரவாகவும், இலங்கை நாட்டுக்கு எதிராகவும் அமைந்துள்ளது என்று அறிவித்தே அவருக்கு எதிராகக் கொதித் தெழுந்திருக்கின்றன. ஜே.வி.பியும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும். (த-க)

## அரசின் மீள்கட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசுற்கும், புலிகளுக்குமிடையிலான பொதுக் கட்டமைப்பொன்றின் தேவைகுறித்தும் ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் அச்சந்திப்பில் வலியுறுத்தினார்.

உலக வங்கியின் புனரமைப்பு நம்பிக்கை நிதியத்தினூடாக வழங்கப்படவுள்ள 10 கோடி யூரோக்களை சுற்றுலா, மீன்பிடித்துறை மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தப் பயன்படுத்தப்படவுள்ளது. இதனைவிட மாத்தறை மட்டக்களப்பு நகரங்களுக்கிடையிலான நெடுஞ் சாலை புனரமைப்புப் பணிகளுக்காக 4 கோடி யூரோக்களை வழங்கவும் ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது நாட்டின் தற்போதைய சமாதான முயற்சிகள் மற்றும் ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணத் திட்டங்கள் குறித்து அமைச்சர் கதிர்காமர் ஐரோப்பிய ஆணையாளருக்கு விளக்கமளித்துள்ளார். சுனாமி நிவாரணப் பணிகளில் அரசும், விடுதலைப்புலிகளும் பரஸ்பரம் ஒத்துழைத்து செயற்படுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (த-க-13)

## புலிகளின் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோர்ஜ் ஆகியோர் இந்த அரசியல் விவகாரக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து நேற்றுமாலை அவர்கள் விமானப்படை ஹெலியில் அழைத்துச் செல்லப்பட இருந்தபோதும் காலநிலைச் சீர்கேடு காரணமாக அந்தத் திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.

தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் அரசியல்விவகார குழுவினர் ஓமந்தையிலிருந்து ஹெலியில் வவுனியாவைச் சென்றடைந்தனர். அங்கிருந்து விமானப்படை விமானம் மூலம் அவர்கள்கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இன்று அதிகாலை 2.30 மணிக்கு அவர்கள் விமானம் ஏறினர் எனத்தெரிவிக்கப்பட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளை அரசு புறக்கணிப்பது தொடர்பாகவும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதில் அரசு காட்டிவரும் அசமந்தப்போக்குத் தொடர்பாகவும் இந்த ஐரோப்பிய விஜயத்தின் போது சர்வதேச நாடுகளுக்குப் புலிகளின் குழு விளக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-க)

## ஜே.வி.பியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறவிட்டால் எமது பிரதேசத்தை எப்படி கட்டியெழுப்புவது என்பது பற்றி நாம் தீர்மானிப்போம் - என்றார். (த-க)




### மணியின் மனமார்ந்த வாழ்த்துக்கள்

நாளை மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு விழாவில் B.Sc. (Eng.) (பொறியியல்) என்னும் பட்டத்தினை பெறும் **செல்வன் வல்லிபுரநாதன் தீபர்தாஸ்** அவர்களைப் பாராட்டி மகிழ்வதோடு அவர் மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகிறோம்.

இயக்குநர்
மணி கல்வி நிறுவனம் – வேலணை,
ஆங்கிலக் கல்லூரி – யாழ்ப்பாணம்.
(42913)(38-18-16)

### மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி-2005

வை. அர்ஜன் ஞாபகார்த்தமாகவும் கழகத்தின் 28ஆவது ஆண்டு நிறைவினையொட்டியும் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

லெவின் ஸ்ரார் விளையாட்டுக்கழகம்
பொன்னையா வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. தொலைபேசி இல: 222 6293

★ 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 7 பேர் பங்குபற்றும் விலகல்முறையிலான போட்டி

★ விண்ணப்ப முடிவுதிகதி: 20.03.2005

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:

★ எரிக்கணேஷ் பல், மூக்குக் கண்ணாடி அகம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்., கொக்குவில் சந்தி.
★ கலா ஸ்ரோர்ஸ் திருநெல்வேலிச் சந்தி.
★ லக்சுமி வெதுப்பகம் ஆறுகால்மடம்.
★ அர்ஜன் தொலைத் தொடர்பகம் (லெவின் ஸ்ரார்).

தலைவர். (C/41394)(50-16-18-38) செயலாளர்.


# சாய்ந்த மருதில் மறியலில் ஈடுபட்ட மக்கள் மீது அதிரடிப்படை தாக்குதல்

## 5 பொது மக்கள் படுகாயம்

சாய்ந்தமருது, மார்ச்10

சாய்ந்தமருதுப் பகுதியில் அரசுக்கு எதிராக வீதி மறியலில் ஈடுபட்ட மக்களைக் கலைப்பதற்காக விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமாக தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் நான்கு மணியளவில் வாகனங்களில்வந்த அதிரடிப்படையினர் சாய்ந்தமருதுவில் வீதிமறியலில் ஈடுபட்டிருந்த மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டனர். எனினும், பொதுமக்கள் தாம் அங்கிருந்து வெளியேறப்போவதில்லை எனத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, மக்களை அங்கிருந்து பலாத்காரமாக வெளியேற்ற அதிரடிப்படையினர் எத்தனித்தனர். இதனால், இருபகுதியினருக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. அது கைகலப்பாக மாறியது. இதன்போது விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

பொதுமக்களின் கல்வீச்சு மற்றும் தாக்குதலுக்கு முகங்கொடுக்கமுடியாமல் விசேட அதிரடிப்படையினர் பின்னர் பின்வாங்கிச் சென்றனர்.

இதேவேளை, மாளிகைக்காடு பகுதியில் மறியலில் ஈடுபட்ட பொதுமக்களையும் அதிரடிப் படையினர் அங்கிருந்து பலவந்தமாக அகற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-க)

## கைதான படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் போது இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்தமையும் தெரிந்தவையே.

வயோதிபர் மீதும் ஏனையோர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 7 இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களின் துப்பாக்கிகளே பொலீஸாரால் நீதி மன்றில் ஒப்படைக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட படையினர் 7 பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் - எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (த-12)

## பொதுக்கட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் அனுமதியுடன் விசேடகூற்று ஒன்றைவெளியிட்டு உரைநிகழ்த்துகின்றார் எனக்கூறி பேசிய போதே அவர் இவ்விடயங்களைத் தெரிவித்தார்.

அனர்த்த நிவாரணப் பணிகள், மீள்கட்டுமானம் ஆகியன குறித்து, அரசு – முஸ்லிம் தரப்போடு பேச்சுநடத்தாமல் இருப்பது குறித்து அந்த உரையில் அவர் கடும் விசனம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோரில் கணிசமான பங்கினர் முஸ்லிம்கள். அவர்களின் கருத்தை – நிலைப்பாட்டை – ஒதுக்கிவிட்டு அப்பிரதேசத்தில் மீள்கட்டமானம் என்பது நகைப்புக்குரியது.

முஸ்லிம் மக்களை ஓரம்கட்டிவிட்டு மேற்கொள்ளப்படக்கூடிய அத்தகை முயற்சிகள் ஒருபோதும் வெற்றிபெறா; பலன்தரா. முஸ்லிம்களை ஒதுக்கிவிட்டு மேற்கொள்ளப்படக்கூடிய இத்தகைய முயற்சிகளை முழுமூச்சாக எதிர்ப்பதைத் தவிர எமக்குவேறு வழி ஏதுமில்லை.

- இவ்வாறு அவர் நாடாளுமன்றத்தில் மேலும்தெரிவித்தார். (த-க)

## பொதுக்கட்டமைப்புக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்பை உருவாக்கும் விவகாரம் தொடர்பாக இலங்கை அரசினதும் விடுதலைப் புலிகளினதும் சமாதானச் செயலகங்களுக்கு இடையில் நோர்வேத் தரப்பின் அனுசரணையோடு நடைபெற்ற பேச்சுக்கள் ஆக்கபூர்வமான திசையில் முன்நகர்ந்திருப்பது பற்றி இச்சந்திப்பில் சொல்ஹெய்ம் பாலசிங்கத்துக்கு எடுத்துரைத்தார்.

இதுதொடர்பாக நோர்வே சமர்ப்பித்த திட்டயோசனையை புலிகள் அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கை அரசு ஏற்றுக் கொண்டு இறுதி இணக்கத்தைத் தெரிவிப்பதே எஞ்சியுள்ளது. அரசுத் தரப்பிலும் இதற்குப் பெரும்பாலும் பச்சைக்கொடி காட்டப்பட்டது. எனினும், அரசுக் கூட்டமைப்பில் பங்காளிக் கட்சிகளைச் சமாளிப்பதற்காக அரசுத் தலைமை காத்திருக்கின்றது என்ற தகவல் பாலசிங்கத்துக்கு நேற்றுத் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

"எங்கள் பக்கத்தில் இணக்கத்தைத் தெரிவித்து விட்டோம். நோர்வே செல்வதற்காகக் கட்டுநாயக்கவுக்கு வந்துள்ள எமது அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் இன்று (புதன்கிழமை) இரவு சந்திக்கும்போது இதுபற்றி மேலும் உறுதி செய்யப்படவிருந்தது" - என்று நேற்றிரவு அன்ரன் பாலசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பந்து இப்போது சந்திரிகா அம்மையாரின் களத்தில்தான் உள்ளது. இனிமேல் அதை அவர் எவ்வாறு கையாள்கிறார் என்பதில்தான் விடயம் தங்கியுள்ளது - என்றும் பாலசிங்கம் சொன்னார்.

கிளிநொச்சி இரணைமடுப்பகுதியில் விடுதலைப் புலிகள் புதிய விமானத்தளம் ஒன்றை அமைத்து விஸ்தரித்து வருகிறார்கள் என முறைப்பாடு தெரிவிக்கும் கடிதமொன்றை இலங்கை ஜனாதிபதி நோர்வேப்பிரதமருக்கு எழுதியிருக்கின்றார் எனக் கூறுப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசின் கவலையை விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கும்படி சொல்ஹெய்ம் மதியுரைஞர் பாலாவை நேற்றுக் கேட்டுக்கொண்டார் எனத் தெரிகின்றது.

அங்கிருப்பது பழைய ஓடு பாதை. யுத்த நிறுத்த உடன்பாடு வரமுன்னரே அது அங்கு உள்ளது. அதில்புதிய விஸ்தரிப்பு எதுவும் நடக்கவில்லை. இவ்விடயத்தில் இலங்கை அரசோ, ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரோ அச்சப்படுவதற்கு எதுவுமில்லை. சில பத்திரிகைகள் தான் வேண்டுமென்றே இதனை ஊதிப்பெருப்பித்து அவ்விடயத்தை மோசமாகக் காட்டுகின்றன - என்று பாலசிங்கம் பதிலளித்தார் எனவும் தெரிகிறது.

புலிகளிடம் புதிதாக விமானங்கள் ஏதும் இருப்பது குறித்தும் தமக்கு ஏதும் தெரியாது எனக் குறிப்பிட்ட பாலசிங்கம், இதுவிடயத்தில் இலங்கை அரசின் கவலையைப் புலிகளின் தலைமைக்குத் தாம் தெரிவிப்பார் என சொல்ஹெய்மிடம் உறுதி கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இரு தரப்பினரும் பொதுவான அரசியல் நிலைமைகள் குறித்தும் மேற்கொண்டு சமாதான முயற்சிகளை ஆரம்பித்து முன்னெடுப்பதற்கான புறநிலை குறித்தும் விரிவாகப் பேசினர் என அறியவருகிறது. (த-க)


COLLEGE OF ENGLISH பிறவுண் வீதி, யாழ்.
SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY: T.THANENDRAN S.L.T.S. 2-II B.Com. H.N.D.A, P.G.Dip. Edu.
பகுதி நேர விரிவுரையாளர் (English) தொழில்நுட்பக் கல்லூரி.
புதியபிரிவு ஆரம்பம்: Thu., Fri. 5.30 p.m. 10.03.2005

புதிய ஓடியோ CD வெளியீடு
சந்திரமுகி, லண்டன்,
கிச்சா வயது 16, மாயாவி CD,
கசற் - 100/=
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்

கணக்கீடு
திரு. சதீஸ்
B.B.A.FM. Spl.
A/L 2005
ஆரம்பம்:11.03.2005
Fri. 6.00 a.m.
Mon., Wed., Fri. - 6.00 a.m.
புகழ் கல்வி நிலையம். நாவடி றோட், மானிப்பாய்.

கணக்கீடு
திரு. சதீஸ்
B.B.A.FM. Spl.
A/L 2006
ஆரம்பம்:11.03.2005
Fri. 5.00 p.m.
Sat., Sun. - 5.00 p.m.
U.T.C. மானிப்பாய் வீதி, உடுவில்.

324, Palaly Road, Jaffna.
BIT
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
External Degree Programme
University of Colombo School of Computing
2nd Semester
New Batch will be Commenced on
Weekday
14th March at 0445 p.m.
Weekend
12th March at 09.00 a.m.
Supported by UNDP/JRRP

கீல்வாத மூட்டு வீக்கம்
கீல்வாத மூட்டு வீக்கம் குணப்படுத்த முடியாதது என உலகம் இதுவரை எண்ணியது. கீல்வாத மூட்டு வீக்கம் வைரஸினால் உருவாகிறது. அதனை நாங்கள் வைரஸ் எதிர்ப்பு ஆயுள்வேத மருந்தினால் சந்தேகத்திற்கு இடமின்றிக் குணப்படுத்துவோம்.
மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:
FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website: www.fppvtl.org
(C/41390)(38-18-16)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.